بِسْمِ اللّٰهِ الرَّحْمٰنِ الرَّحِيْمِ نَحْمَدُهٗ وَنُصَلِّيْ عَلٰى رَسُوْلِهِ الْكَرِيْمِ وَعَلٰى عَبْدِهِ الْمَسِيْحِ الْمَوْعُوْدِ

وَلَقَدْ نَصَرَكُمُ اللّٰهُ بِبَدْرٍ وَّاَنْتُمْ اَذِلَّةٌ

# பதர்

வார இதழ் - காதியான்

Weekly BADAR Qadian Tamil

தொகுதி 7

இதழ் 35

ஆசிரியர் முஸ்ஸம்மில் அஹ்மது

துணை ஆசிரியர் அப்துர் ரஹ்மான் தாஹிர்

வருடாந்திர சந்தா ரூபாய் 600/-

ஹிஜ்ரி கமரி 1444 - ஸஃபர் 04 ★ தபூக் 01 - ஹிஜ்ரி ஷம்ஸி 1401 ★ 01 செப்டம்பர் 2022

## அல்லாஹ்வின் கட்டளை

قَالَ مُوْسٰى لِقَوْمِهِ اسْتَعِيْنُوْا بِاللّٰهِ
وَاصْبِرُوْا ۚ اِنَّ الْاَرْضَ لِلّٰهِ ۙ يُوْرِثُهَا
مَنْ يَّشَآءُ مِنْ عِبَادِهٖ ؕ وَالْعَاقِبَةُ
لِلْمُتَّقِيْنَ ۝

**பொருள்** : (இதற்கு) அல்லாஹ்விடம் உதவி கோருங்கள். மேலும் பொறுமையை கடைபிடியுங்கள். நிச்சயமாக நாடு அல்லாஹ்விற்குரியது. அவன் தன் அடியார்களுள் விரும்புபவரை அதற்கு வாரிசாக்குகின்றான். மேலும், (நல்ல) முடிவு இறையச்சமுடையோருக்கே உரியது என்று மூஸா தமது சமுதாயத்தினரிடம் கூறினார். (அல்அஃராஃப்:129)

## அஹ்மதிய்யா செய்திகள்

ஸய்யிதுனா ஹஸ்ரத் அமீருல் முஃமினீன் ஐந்தாவது கலீஃபத்துல் மஸீஹ் அய்யதஹுல்லாஹுத்தஆலா பினஸ்ரிஹில் அஸீஸ் அவர்கள் அல்லாஹ்வின் அருளால் நலமுடன் இருந்து வருகின்றார்கள். அல்ஹம்துலில்லாஹ். ஜமாஅத் சகோதரர்கள் ஹுஸூர் அவர்களின் சிறந்த உடல் நலத்திற்காகவும், அவர்களின் நீண்ட ஆயுளுக்காகவும், அவர்களது உயர்வான நோக்கங்களில் வெற்றி கிடைப்பதற்காகவும், அவர்களது சிறப்பான பாதுகாப்பிற்காகவும், தொடர்ந்து துஆ செய்து வாருங்கள். அல்லாஹ் ஒவ்வொரு நொடியும் ஹுஸூர் அவர்களது பாதுகாவலனாகவும் உதவியாளனாகவும் இருப்பானாக. மேலும் அவர்களுக்கு உதவி செய்வானாக! ஆமீன்

**அப்தால் எனும் நல்லடியார்கள் யாரென்றால், அவர்கள் தமக்குள் தூய மாறுதல்களை ஏற்படுத்திக் கொள்கின்றனர். மேலும் அந்த தூய மாறுதல்களின் காரணமாக அவர்களின் உள்ளம் பாவத்தின் இருள்களிலிருந்தும், கறைகளிலிருந்தும் தூய்மை ஆகிவிடுகின்றன.**

வாக்களிக்கப்பட்ட மஸீஹும் உறுதிமொழி வழங்கப்பட்ட மஹ்தியுமான ஹஸ்ரத் அக்தஸ் மிர்ஸா குலாம் அஹ்மது காதியானி (அலை) அவர்களின் கூற்றுகளிலிருந்து......

பாருங்கள்! மனிதன் எந்த அளவுக்கு (தன்னிடம் தூய) மாறுதல்களை ஏற்படுத்திக் கொள்கிறானோ, அவன் அதே அளவிற்கு (நல்லடியார்கள் எனும்) அப்தால்களின் வட்டத்தில் இணைந்துவிடுகிறான். அப்தால்களின் வட்டத்தில் இணையாத வரை திருக்குர்ஆன் ஞானங்கள் (அவனுக்கு) திறந்து கொடுக்கப்படுவதில்லை. அப்தால் என்பதன் பொருளை புரிவதில் மக்கள் தவறிழைத்துள்ளனர். மேலும், சுயமாக ஏதோ ஒன்றை பொருளாக புரிந்து கொண்டுள்ளனர். உண்மையில், அப்தால் எனும் நல்லடியார்கள் யாரென்றால், அவர்கள் தமக்குள் தூய மாறுதல்களை ஏற்படுத்திக் கொள்கின்றனர். மேலும் அந்த தூய மாறுதல்களின் காரணமாக அவர்களின் உள்ளம் பாவத்தின் இருள்களிலிருந்தும், கறைகளிலிருந்தும் தூய்மை ஆகிவிடுகின்றன.

ஷய்த்தானின் ஆதிக்கம் முடிவடைந்து அல்லாஹ்வின் அர்ஷ் அவர்களது உள்ளத்தில் அமைந்திருக்கும். பின்னர் ரூஹுல்குத்தூஸ் எனும் பரிசுத்தஆவியின் மூலம் ஆற்றல் பெற்று அவர்கள் இறைவனிடமிருந்து அருட்களைப் பெறுகின்றனர்.

நான் உங்களுக்கு நற்செய்தி வழங்குகிறேன். உங்களில் எவர் தம்மிடம் தூய மாறுதல்களை செய்துகொள்வாரோ அவர் அப்தால் ஆவார். மனிதன் இறைவனின் பக்கம் அடியெடுத்து வைத்தால், அப்போது அல்லாஹ்வின் அருள் விரைந்து வந்து அவருக்கு உதவி செய்கின்றது. இது உண்மையாகும். மேலும் நான் உங்களுக்கு கூறுகின்றேன். தந்திரங்களால் திருக்குர்ஆன் ஞானங்கள் கிடைக்காது. மூளையின் வலிமை மற்றும் மூளையின் வளர்ச்சி மட்டுமே திருக்குர்ஆன் ஞானங்களை ஈர்ப்பதற்கு காரணியாக இருக்க முடியாது. உண்மையான வழிமுறை இறையச்சம் மட்டுமே ஆகும். இறையச்சம் உடையவரின் ஆசிரியராக இறைவன் இருக்கின்றான். இதன் காரணமாகவே

இதன் தொடர்ச்சி - 10ஆம் பக்கம்...

**சமுதாய மேன்மை நிச்சயமாக நல்ல விஷயம் ஆகும். ஆனால் ஏமாற்றி, வஞ்சகம் செய்து அதனைப் பெறுவது ஒருபோதும் ஆகுமானதல்ல.**

**ஒருதரப்பின் வலிமையை வஞ்சகத்தால் ஏமாற்றி பலவீனப்படுத்த வேண்டும் என்ற நோக்கத்துடன் எந்த ஒரு உடன்படிக்கையும் செய்யப்படக் கூடாது.**

**ஒரு பலவீனமான சமுதாயத்துடன் இவ்வாறான உடன்படிக்கை செய்தல் கூடாது. அதாவது, அந்த உடன்படிக்கையை அடிப்படையாகக் கொண்டு அதனை தமக்கு கீழ் கொண்டு வந்துவிடவேண்டும் என்பது அதன் நோக்கமாக இருக்கக் கூடாது.**

**ஒருதரப்பின் முன்னேற்றத்தை தடுக்கவேண்டும் என்ற நோக்கத்துடன் எந்த ஒரு உடன்படிக்கையும் செய்தல் கூடாது.**

وَلَا تَكُوْنُوْا كَالَّتِيْ نَقَضَتْ غَزْلَهَا مِنْۢ
بَعْدِ قُوَّةٍ اَنْكَاثًا ؕ تَتَّخِذُوْنَ اَيْمَانَكُمْ دَخَلًاۢ بَيْنَكُمْ
اَنْ تَكُوْنَ اُمَّةٌ هِيَ اَرْبٰى مِنْ اُمَّةٍ ؕ اِنَّمَا يَبْلُوْكُمُ اللّٰهُ
بِهٖ ؕ وَلَيُبَيِّنَنَّ لَكُمْ يَوْمَ الْقِيٰمَةِ مَا كُنْتُمْ فِيْهِ تَخْتَلِفُوْنَ ۝

(அந்நஹ்ல்:93)

இந்த வசனத்திற்கு ஹஸ்ரத் முஸ்லிஹ் மவ்வூத் (ரலி) அவர்கள் விளக்கமளித்தவாறு கூறுகிறார்கள் :

இந்த வசனத்தின் சொற்களிலிருந்து, அந்நிய சமுதாயத்துடனான உடன்படிக்கைகளைப் பற்றியும் இதில் குறிப்பிடப்பட்டுள்ளன என்பது தெரிய வருகிறது. இந்தக் கருத்தின் அடிப்படையில் இந்த வசனத்தை ஒரு நிரந்தர கருத்தாக ஆக்கிக் கொள்ள வேண்டும். அதாவது لَا تَكُوْنُوْا என்பதிலிருந்து ஒரு புதிய கருத்து ஆரம்பமாகிவிடுகிறது. அதன் பொருள் இவ்வாறு அமையும். அதாவது, எவ்வாறு அல்லாஹ்வுடனான உடன்படிக்கை மற்றும் தங்களுக்கிடையிலான பரஸ்பர உடன்படிக்கையை பேணுவது அவசியமோ அதேபோன்று மற்ற சமுதாயங்களுடன் செய்யப்பட்ட உடன்படிக்கைகளை பேணுவதும் அவசியமாகும். அந்த உடன்படிக்கைகளை கண்காணித்து வாருங்கள். இல்லையென்றால்,

இதன் தொடர்ச்சி - 10ஆம் பக்கம்...

## நபிமொழி

**வட்டிப் பணத்தை உண்பதற்கு தடையும், தண்டனையும்**

(2085) : ஹஸ்ரத் ஸமுரா பின் ஜன்தப் (ரலி) அவர்கள் அறிவிக்கின்றார்கள். ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள் கூறினார்கள்:

இன்று இரவு நான் இரண்டு நபர்களை கனவில் கண்டேன். அவர்கள் என்னிடம் வந்தனர். அவர்கள் என்னை ஒரு தூய்மையான நிலத்திற்கு அழைத்துச் சென்றனர். நாங்கள் நடந்துகொண்டே சென்றோம். இறுதியில் ஒரு இரத்த ஆற்றினை அடைந்தோம். அதில் (அதாவது அதன் கரையில்) ஒரு நபர் நின்று கொண்டிருந்தார். அவருக்கு முன்னால் கற்கள் வைக்கப்பட்டிருந்தன. நதியின் நடுவில் மற்றொரு நபர் இருந்தார். நதியின் நடுவில் நின்றிருந்த நபர் முன்னேறிய போதும். வெளியேறுவதற்கு எண்ணம் கொண்டபோதும், (நதியின் கரையில் நின்று கொண்டிருந்த) அந்த நபர் அவரின் முகத்தில் கற்களை எறிந்தார். மேலும் அவன் முன்னர் நின்று கொண்டிருந்த இடத்திற்கே திரும்பி செல்ல அவரை வைத்துவிட்டார். இதேபோன்று, அந்த நபர் எப்போதெல்லாம் வெளியேறுவதற்கு முயன்றாரோ அப்போதெல்லாம் அவர் அவனின் முகத்தில் கற்களை எறிந்தார். அதனால் அவர் மீண்டும் திரும்பிச் சென்றுவிடுவார். இது என்ன நிகழ்வு? என்று நான் கேட்டேன். அதற்கு, தாங்கள் (ஸல்) அவர்கள், எந்த நபரை நதியில் நிற்பதாகக் கண்டீர்களோ அவர் வட்டி(ப் பணத்தை) உண்பவராவார் என்று அவர் கூறினார்.

**ஹஸ்ரத் நபி (ஸல்) அவர்களுக்கு பிடித்தமான உணவு சுரைக்காய்**

(2095) : ஹஸ்ரத் அனஸ் பின் மாலிக் (ரலி) அவர்கள் அறிவிக்கின்றார்கள்: ஒரு தையல்காரர் தான் தயார் செய்து வைத்திருந்த உணவை உண்பதற்காக ஹஸ்ரத் நபி (ஸல்) அவர்களை அழைத்தார். நானும் ஹஸ்ரத் நபி (ஸல்) அவர்களுடன் அந்த விருந்திற்குச் சென்றேன் என்று ஹஸ்ரத் அனஸ் பின் மாலிக் (ரலி) அவர்கள் கூறுகின்றார்கள். அந்த நபர், ஹஸ்ரத் நபி (ஸல்) அவர்களுக்கு முன்னால் ரொட்டியையும், குழம்பையும் வைத்தார். அந்தக் குழம்பில் சுரைக்காயும், இறைச்சித் துண்டுகளும் போடப்பட்டிருந்தன. ஹஸ்ரத் நபி (ஸல்) அவர்கள், தட்டின் ஓரத்தில் இருந்து சுரைக்காயை எடுப்பதை நான் கண்டேன். அன்று முதலே நான் சுரைக்காயை விரும்புகிறேன் என்று (ஹஸ்ரத் அனஸ்(ரலி) கூறுகின்றார்கள். (புகாரி, தொகுதி 4, பாடம் வியாபாரம், காதியான் பதிப்பு 2008)

பிரிண்டர் மற்றும் பப்ளிஷரான ஜமீல் அஹ்மது நாஸிர் அவர்கள் காதியானிலுள்ள ஃபஸ்லே உமர் அச்சகத்தில் அச்சிட்டு காதியானிலுள்ள பதர் பத்திரிகை அலுவலகம் மூலம் இதனை வெளியிட்டுள்ளார்.
Proprietor Nigran Badar Board Qadian

# ஜுமுஆ பேருரை

## ஹஸ்ரத் நபி (ஸல்) அவர்களின் மகத்துவமிக்க கலீஃபா ராஷித், சித்தீக்கே அக்பர் ஹஸ்ரத் அபூபக்ர் (ரலி) அவர்களின் சிறப்புகள் மற்றும் உயர் அந்தஸ்து

ஒரு படைத் தளபதி எவ்வளவுதான் திறமை வாய்ந்தவராக இருந்தாலும், நாட்டின் அதிபரின் தனிப்பட்ட சிறப்புகளும் உயர்ந்த நடத்தைகளும் அவர் மீது தாக்கத்தை ஏற்படுத்தாத வரை அந்தப் படைத் தளபதியால் முழு நம்பிக்கையுடனும், சமநிலையுடனும், நன்றியுணர்வுடனும், கலப்பற்ற தன்மையுடனும், பணியாற்ற இயலாது

**ஸய்யிதுனா அமீருல் முஃமினீன் ஹஸ்ரத் மிர்ஸா மஸ்ரூர் அஹ்மது ஐந்தாவது கலீஃபத்துல் மஸீஹ்** (அய்யதுஹுல்லாஹுதஆலா பினஸ்ரிஹில் அஸீஸ்) அவர்கள் **இலண்டன் இஸ்லாமாபாத்திலுள்ள முபாரக் பள்ளிவாசலில் 29 ஜுலை 2022,** அதாவது ஹிஜ்ரி ஷம்ஸி 1401 ஆண்டு **வஃபா** மாதம் **29ஆம் தேதி** அன்று ஆற்றிய **ஜுமுஆ பேருரை**

اَشْهَدُ اَنْ لَّا اِلٰهَ اِلَّا اللّٰهُ وَحْدَهٗ لَا شَرِيْكَ لَهٗ
وَاَشْهَدُ اَنَّ مُحَمَّدًا عَبْدُهٗ وَرَسُوْلُهٗ
اَمَّا بَعْدُ فَاَعُوْذُ بِاللّٰهِ مِنَ الشَّيْطٰنِ الرَّجِيْمِ
بِسْمِ اللّٰهِ الرَّحْمٰنِ الرَّحِيْمِ
اَلْحَمْدُ لِلّٰهِ رَبِّ الْعٰلَمِيْنَ ۝ الرَّحْمٰنِ الرَّحِيْمِ ۝
مٰلِكِ يَوْمِ الدِّيْنِ ۝ اِيَّاكَ نَعْبُدُ وَاِيَّاكَ نَسْتَعِيْنُ ۝
اِهْدِنَا الصِّرَاطَ الْمُسْتَقِيْمَ ۝
صِرَاطَ الَّذِيْنَ اَنْعَمْتَ عَلَيْهِمْ ۙ
غَيْرِ الْمَغْضُوْبِ عَلَيْهِمْ وَلَا الضَّآلِّيْنَ ۝

ஹஸ்ரத் அபூபக்ர் சித்தீக் (ரலி) அவர்களின் காலத்தில் நடைபெற்ற போர்கள் பற்றி (கடந்த குத்பாக்களில்) கூறப்பட்டுக் கொண்டிருந்தது. இன்று ஹஸ்ரத் காலித் பின் வலீத் (ரலி) அவர்களின் தலைமையில் போரிடப்பட்ட போர்களைப் பற்றிய எஞ்சிய குறிப்புகளை எடுத்துரைப்பேன். போர்களைப் பற்றிய இந்தக் குறிப்புகளை இன்று நிறைவு செய்வதற்காக, ஒருவேளை இன்றைய குத்பா சிறிது நீளமாகவும் இருக்கலாம்.

ஹீரா போர். ரபீயுல் அவ்வல் ஹிஜ்ரி 12 ஆம் ஆண்டின் துவக்கத்தில் ஹஸ்ரத் காலித் (ரலி) அவர்கள் அம்கீஷியாவிலிருந்து ஹீராவுக்குப் பயணமானார்கள். இது தொடர்பாக இவ்வாறு உள்ளது: ஹஸ்ரத் காலித் (ரலி) அவர்கள் அம்கீஷியாவிலிருந்து ஹீராவுக்குப் பயணமானார்கள். ஹீரா யூப்ரட்டீஸ் நதிக்கு அருகில் கிறித்தவ அரேபியர்களின் பழைய தலைமையகமாக இருந்தது. அப்போது, ஹீராவின் ஆட்சியாளனாக ஓர் ஈரானியன் இருந்தான்.

இப்போது ஹஸ்ரத் காலித் (ரலி) அவர்களின் படை தன் பக்கம் திரும்பும் என்பதை ஹீராவின் ஆட்சியாளன் அனுமானித்திருந்தான். எனவே, அவன் ஹஸ்ரத் காலித் (ரலி) அவர்களோடு போர் புரிய ஏற்பாடு செய்ய ஆரம்பித்திருந்தான். ஹஸ்ரத் காலித் (ரலி) அவர்கள் அங்கு வருவதற்கு நதியின் வழியை மேற்கொள்வார்கள்: கப்பல்களில் பயணித்து வந்தடைவார்கள் என்பதையும் கவனித்துவிட்டான். ஹஸ்ரத் காலித் (ரலி) அவர்களின் கப்பல்கள் சேற்றில் புதைந்து விட வேண்டும் என்பதற்காக, அவன் தனது மகனுக்கு யூப்ரட்டீஸ் நதியின் தண்ணீரைத் தடுத்து நிறுத்துமாறு கட்டயையிட்டான். தான் அவனுக்குப் பின்னால், சென்று ஹீராவுக்கு வெளியில் தனது படையை நிறுத்தினான்.

ஹஸ்ரத் காலித் (ரலி) அவர்கள் அம்கீஷியாவிலிருந்து புறப்பட்டார்கள். பொருட்கள் மற்றும் போர்ச் செல்வங்களுடன் படையும் கப்பல்களில் ஏற்றப்பட்டது. அப்பொழுது தண்ணீரின் குறைவு காரணமாக, கப்பல்கள் தரை தட்டியதனால் ஹஸ்ரத் காலித் (ரலி) அவர்களுக்கு மிகவும் சிரமம் ஏற்பட்டது. மாலுமிகள் கூறினார்கள்: பாரசீகர்கள், யூப்ரட்டீஸ் நதியின் தண்ணீர் இந்தப் பக்கம் வராத வண்ணம் தடுத்து, ஆறுகளுக்கு திருப்பி விட்டு விட்டார்கள். எல்லாத் தண்ணீரும் மற்ற வழியாக பாய்ந்தோடுகிறது. ஆறுகள் மூடப்படாத வரை நம்மிடம் தண்ணீர் வர முடியாது.

இதைக் கேட்ட ஹஸ்ரத் காலித் (ரலி) அவர்கள் உடனடியாக சவாரிகளின் ஒரு படையை உடன் அழைத்துக் கொண்டு ஆட்சியாளனின் மகனை நோக்கிச் சென்றார்கள். வழியில் அத்தீக் நதியின் கரையில் படையின் ஒரு பகுதியோடு ஹஸ்ரத் காலித் (ரலி) அவர்கள் மோத நேரிட்டது. ஹஸ்ரத் காலித் (ரலி) அவர்கள் அந்த மக்கள் மீது திடீர் தாக்குதல் தொடுத்துவிட்டார்கள். அப்போது, அவர்கள் முற்றிலும் கவனமற்றவர்களாக இருந்தனர். ஹஸ்ரத் காலித் (ரலி) அவர்கள், அவர்கள் அனைவரையும் கொன்று விட்டார்கள். பிறகு, முன்னோக்கிச் சென்றார்கள். ஹீராவின் ஆட்சியாளனின் மகன் நதியின் திசையைத் திருப்பி விடும் வேலையைக் கண்காணித்துக் கொண்டிருக்கின்றான் என்பதைக் கண்டார்கள்.

அப்பொழுது திடீர் என்று அவன் மீது அன்னார் தாக்குதல் நடத்தி, அவனையும் அவனது படையையும் கொன்றுவிட்டார்கள். மேலும், தடுப்பணையை உடைத்து மீண்டும் நதியில் தண்ணீரைப் பாய்ந்தோடச் செய்தார்கள். பிறகு, தாமே அங்கு நின்று அந்தப் பணியைக் கண்காணித்து வந்தார்கள். எதுவரை என்றால், கப்பல்கள் மீண்டும் பயணத்தைத் தொடங்கிவிட்டன. இதன் பிறகு, ஹஸ்ரத் காலித் (ரலி) அவர்கள் தமது தலைவர்கள் அனைவரையும் ஒன்று திரட்டி, கோர்னாக் எனும் இடத்தை சென்றடைந்தார்கள்.

கோர்னாக் ஹீராவுக்கு அருகில் இருந்த ஒரு கோட்டை ஆகும். ஆனால், அர்த் ஷீர் மன்னன் இறந்து விட்டான் என்பதும், அவனது மகனும் போரில் கொல்லப்பட்டுவிட்டான் என்பதும் ஆட்சியாளனுக்கு தெரிந்த பிறகு, அவன் போர் புரியாமல் யூப்ரட்டீஸ் நதியைக் கடந்து தப்பி ஓடிவிட்டான். ஆனால், ஆட்சியாளன் தப்பி ஓடிய பிறகும் கூட ஹீரா வாசிகள் துணிவிழக்கவில்லை. அவர்கள் கோட்டையில் அடைப்பட்டு விட்டனர். அங்கு நான்கு கோட்டைகள் இருந்தன. நான்கு கோட்டைகளிலும் அடைப்பட்டு போருக்கான ஆயத்தம் மேற்கொள்ள ஆரம்பித்தனர்.

இவ்வாறு எழுதப்பட்டுள்ளது: ஹஸ்ரத் காலித் பின் வலீத் (ரலி) அவர்கள் கோட்டைகளைப் பின்வரும் முறைப்படி முற்றுகையிட்டார்கள்:

ஸர்ரார் பின் அஸ்கர் அவர்கள் அப்யஸ் கோட்டையை முற்றுகையிடுவதற்காக நியமிக்கப்பட்டார்கள். அதில் அய்யாஸ் பின் கபீஸா தாயீ தஞ்சம் அடைந்திருந்தான். ஸர்ரார் பின் கத்தாப் அவர்கள் அத்ஸய்யன் கோட்டையை முற்றுகையிடுவதற்காக நியமிக்கப்பட்டார்கள். அதில் அதீ பின் அதீ தஞ்சம் அடைந்திருந்தான்.

ஸர்ரார் பின் முக்ரின் அவர்கள் பனூ மஃஸன் கோட்டையை முற்றுகையிடுவதற்காக நியமிக்கப்பட்டார்கள். அதில் இப்னு அகால் அடைக்கலம் புகுந்திருந்தான். முஸன்னா பின் ஹாரிஸா அவர்கள் இப்னு மகீலா கோட்டையை முற்றுகையிடுவதற்காக நியமிக்கப்பட்டார்கள். அதில் அம்ர் பின் அப்தில் மஸீஹ் அடைக்கலம் புகுந்திருந்தான்.

ஹஸ்ரத் காலித் (ரலி) அவர்கள் தமது அமீர்மார்களின் பெயரில் இவ்வாறு கட்டளை அனுப்பினார்கள்: முதலில் அந்த மக்களுக்கு இஸ்லாத்தின் பால் அழைப்புவிடுங்கள். அந்த மக்கள் இஸ்லாத்தை ஏற்றுக் கொண்டால், அவர்கள் இஸ்லாத்தை தழுவியதை ஏற்றுக் கொள்ளுங்கள். அவர்கள் நிராகரித்துவிட்டால், அவர்களுக்கு ஒருநாள் கால அவகாசம் அளியுங்கள்.

அவர்களுக்கு இவ்வாறும் கட்டளையிட்டார்கள்: எதிரிகளுக்கு சந்தர்ப்பம் கொடுக்காதீர்கள். மாறாக, அவர்களுடன் போரிடுங்கள். முஸ்லிம்களை எதிரிகளுடன் போர் புரிவதை விட்டும் தடுக்காதீர்கள். எதிரிகள் போர் புரிவதை மேற்கொண்டார்கள். முஸ்லிம்கள் மீது அவர்கள் கற்களை வீச ஆரம்பித்துவிட்டனர். முஸ்லிம்கள் அவர்கள் மீது அம்பு மழையை பொழியச் செய்தார்கள். அவர்கள் மீது பாய்ந்து, மாளிகைகளையும் கோட்டைகளையும் வெற்றி கண்டார்கள். அங்கிருந்த பாதிரியார்கள் உரத்த குரலில்

இவ்வாறு கூறினார்கள்:

மாளிகை வாசிகளே! உங்களைத் தவிர, எங்களை எவரும் கொல்லக்கூடாது. அதாவது, அவர்களுக்கு எழுச்சியூட்ட முயன்றனர்.

மாளிகை வாசிகள் இவ்வாறு குரல் கொடுத்தனர்: அரேபியர்களே! உங்களுடைய மூன்று நிபந்தனைகளில் ஒன்றை நாங்கள் ஏற்றுக் கொண்டோம். எனவே, நீங்கள் (போரை) நிறுத்துங்கள்.

அரேபிய முஸ்லிம்கள் வெற்றிபெறுகின்றார்கள் என்பதை அவர்கள் அங்கு பார்த்தபோது, அவர்கள் நிபந்தனைகளுடன் கோட்டைகளைத் திறப்பதற்கான எண்ணத்தை வெளிப்படுத்தினார்கள். அந்தக் கோட்டைகளின் தலைவர்கள் வெளியே வந்தனர். பிறகு, ஹஸ்ரத் காலித் (ரலி) அவர்கள் அந்த மாளிகை வாசிகளைத் தனித் தனியே சந்தித்தார்கள். அவர்களின் இந்தச் செயலால் அவர்களைக் குற்றஞ்சாட்டினார்கள். குற்றஞ்சாட்டிய வண்ணம் இவ்வாறு கூறினார்கள்:

உங்கள் மீது அந்தோ பரிதாபம்! நீங்கள் உங்களை என்னவாகக் கருதிக் கொண்டு எங்களுடன் போரிட்டீர்கள்? நீங்கள் அரேபியர்கள் என்றால், எதனால் நீங்கள் உங்களுடைய சமுதாயத்துடனேயே போரிடுவதற்கு இணங்கினீர்கள்? நீங்கள் அரபு அல்லாத மக்கள் என்றால், நீதியிலும், நியாயத்திலும் நிகரில்லாத ஒரு சமுதாயத்தோடு போரிட்டு வெற்றி பெற்றுவிடுவீர்கள் என்று நினைக்கிறீர்களா?

தலைவர்கள் ஜிஸ்யா வரி செலுத்த சம்மதித்துவிட்டார்கள். ஒரே சமுதாயமாக இருப்பதனால் இந்த ஈராக்கைச் சேர்ந்த அரேபியர்கள் கண்டிப்பாக இஸ்லாத்தை ஏற்றுக் கொள்வார்கள் என்று ஹஸ்ரத் காலித் (ரலி) அவர்கள் நம்பினார்கள். ஆனால், அந்த மக்கள் வழக்கப்படி கிறித்தவர்களாக இருப்பதில் பிடிவாதம் பிடித்தபோது, அன்னாருக்கு மிகவும் வியப்பு ஏற்பட்டது.

எவ்வாறு இருப்பினும், ஹஸ்ரத் காலித் (ரலி) அவர்கள் ஹீரா வாசிகளுக்கும், முஸ்லிம்களுக்கும் இடையிலான உடன்படிக்கையை எழுதினார்கள். அது இவ்வாறாகும்.

பிஸ்மில்லாஹிர் ரஹ்மானிர் ரஹீம். இது காலித் பின் வலீத் பின் அத்தீ, அம்ர் பின் அத்தீ, அம்ர் பின் அப்தில் மஸீஹ், அய்யாஸ் பின் கபீஸஹ் மற்றும் ஹைரீ பின் அகால் ஆகியோருடன் செய்து கொள்ளும் உடன்படிக்கை ஆகும்.

அவர்கள் ஹீராவாசிகளின் தலைவர்கள் ஆவார்கள். ஹீரா வாசிகள் இந்த உடன்படிக்கையை ஏற்றுக் கொள்கின்றனர். மேலும், அன்னார் அவர்களுக்குக் கட்டளையிட்டார்கள்.

அவர்களுடன் ஒரு லட்சத்து தொண்ணூற்று ஆயிரம் திர்ஹம்களுக்கு உடன்படிக்கை செய்தார்கள். அது ஒவ்வோர் ஆண்டும் அவர்களைப் பாதுகாப்பதற்காக அவர்களிடம் இருந்து வசூலிக்கப்படும். அதாவது, உள்ளூர் மக்களைப் பாதுகாப்பதற்காக அந்த ஜிஸ்யா வரி வசூலிக்கப்படும் என்று நியமித்தார்கள். எவர்களிடம் உலக செல்வங்கள் இருக்கின்றனவோ, அவர்கள் துறவிகளானாலும் சரி! பாதிரிகள் ஆனாலும் சரி! அவர்களிடம் வசூலிக்கப்படும். ஆனால், எதுவும் இல்லாதவர்கள், உலகைவிட்டு விலகியவர்கள், உலகை விட்டுவிட்டவர்கள் ஆகியோரைத் தவிர.

இந்த உடன்படிக்கை அவர்களைப் பாதுகாக்கும் நிபந்தனையின் பேரில் இருக்கும். ஒருவேளை அவர்களால் அந்த மக்களைப் பாதுகாப்பதற்கான ஏற்பாடு செய்ய முடியாமல் போனால், அந்த மக்கள் மீது ஜிஸ்யா வரி எதுவும் இருக்காது. எதுவரை என்றால், அவர் அதாவது ஆட்சியாளர் அவர்களின் பாதுகாப்புக்கான ஏற்பாடு செய்ய வேண்டும். ஒருவேளை அவர்கள் தமது சொல் அல்லது செயல் மூலமாக உடன்படிக்கையில் நம்பிக்கை துரோகம் செய்தால் இந்த உடன்படிக்கை ரத்தாகிவிடும். இந்த உடன்படிக்கை ரபீயுல் அவ்வல் மாதம் ஹிஜ்ரீ 12 ஆம் ஆண்டு எழுதப்பட்டது.

இந்த எழுத்து மடல் ஹீரா வாசிகளிடம் ஒப்படைக்கப்பட்டது. ஹஸ்ரத் அபூபக்ர் (ரலி) அவர்களின் மரணத்திற்குப் பிறகு, சவாத் வாசிகள் முர்தத் ஆன போது அவர்கள் இந்த உடன்படிக்கையை அவமதித்தார்கள். இந்த உடன்படிக்கைபடி செயல்படவில்லை. மற்றவர்களுடன் இணைந்து அவர்களும் நிராகரிப்பில் மூழ்கினார்கள். மக்கள் மீது பாரசீகர்கள் ஆதிக்கம் செலுத்தி விட்டனர். ஹஸ்ரத் முஸன்னா (ரலி) அவர்கள் ஹஸ்ரத் உமர் (ரலி) அவர்களின் கிலாஃபத் காலத்தில் ஹீராவை மீண்டும் வெற்றிக் கண்டபோது, அந்த மக்கள் இந்த உடன்படிக்கையையே முன்வைத்தார்கள். ஆனால், ஹஸ்ரத் முஸன்னா (ரலி) அவர்கள் அதை ஏற்றுக் கொள்ளவில்லை. மேலும், அவர்கள் மீது வேறு ஒரு நிபந்தனையை விதித்தார்கள். பிறகு, ஹஸ்ரத் முஸன்னா (ரலி) அவர்கள் சில இடங்களில் தோல்வி கண்டபோது போர்களில் அவர்களும் சற்று பின்வாங்க நேர்ந்தது.

அப்போது அந்த மக்கள் மீண்டும் மற்ற மக்களுடன் இணைந்து நிராகரிப்பை மேற்கொண்டார்கள். கிளர்ச்சியாளர்களுக்கு உதவி செய்து உடன்படிக்கையை அவமதித்தார்கள். அந்த உடன்படிக்கைபடி அவர்கள் செயல்படவில்லை. பிறகு, ஹஸ்ரத் சஃஆத் (ரலி) அவர்கள் ஹீராவை வெற்றிக் கண்டபோது, அந்த மக்கள் முந்தைய உடன்படிக்கை மீது உடன்பட விரும்பினார்கள். அப்போது ஹஸ்ரத் சஃஆத் (ரலி) அவர்கள் அந்த இரண்டில் ஓர் உடன்படிக்கையை முன் வையுங்கள் என்று கூறினார்கள். ஆனால், அந்த மக்களால் முன்வைக்க முடியவில்லை.

இதனால், ஹஸ்ரத் சஃஆத் (ரலி) அவர்கள் அந்த மக்களுக்கு வரி விதித்தார்கள். அவர்களின் நிதியாற்றலைப் பற்றி ஆய்வு செய்த பிறகு, முத்துக்கள் போக, நான்கு லட்சம் வரியாக விதித்தார்கள்.

ஹீரா வெற்றி கொள்ளப்பட்ட பிறகு, ஹஸ்ரத் காலித் (ரலி) அவர்கள் வெற்றித் தொழுகை தொழுதார்கள். அதில் ஒரு சலாமில் எட்டு ரக்அத்துகளை நிறைவேற்றினார்கள். அதாவது, எட்டு ரக்அத்துகளை சேர்த்துத் தொழுதார்கள். இதை முடித்து வந்த பிறகு, கூறினார்கள்: மூத்தா போரில் நான் போர் புரிந்த போது, ஒன்பது வாள்கள் எனது கைகளால் உடைந்தன. நான் பாரசீகர்களைச் சேர்ந்த இந்த சமுதாயத்துடன் போரிட்ட அளவு வேறு எந்த சமுதாயத்தடனும் போரிட்டதில்லை. நான் பாரசீகர்களில் உல்லைஸ் வாசிகளுடன் போரிட்ட அளவு வேறு எவருடனும் போரிட்டதில்லை. பிறகு, எழுதப்பட்டுள்ளது:

அந்த மக்கள் ஹஸ்ரத் காலித் (ரலி) அவர்களுக்கு சில அன்பளிப்புகளையும் அனுப்பினார்கள். ஆனால், ஹஸ்ரத் காலித் (ரலி) அவர்கள் வெற்றியின் நற்செய்தியுடன் சேர்த்து அந்த அன்பளிப்புகளையும் ஹஸ்ரத் அபூபக்ர் (ரலி) அவர்களிடம் அனுப்பி வைத்துவிட்டார்கள்.

ஹஸ்ரத் அபூபக்ர் (ரலி) அவர்களும் நீதி நியாயத்தின் உயர்த் தரத்திற்கான பாடம் கற்பித்த வண்ணம் அந்த அன்பளிப்புகள் அனைத்தையும் ஜிஸ்யா வரியில் சேர்த்து ஏற்றுக் கொண்டார்கள். மேலும், ஹஸ்ரத் காலித் (ரலி) அவர்களுக்கு இவ்வாறு எழுதினார்கள்:

இந்த அன்பளிப்புகள் ஜிஸ்யா வரியில் சேர்ந்தவை என்றால் சரி! நீங்கள் அவற்றை ஜிஸ்யா வரி கணக்கில் எடுத்துக் கொண்டு மீதத் தொகையை வசூல் செய்யுங்கள். அதாவது, அந்தப் பொருட்களை அன்பளிப்பாக ஏற்றுக் கொள்ளவில்லை. அதாவது, அந்தப் பொருட்களை அன்பளிப்பாக ஏற்றுக் கொள்ளவில்லை. மாறாக, ஜிஸ்யா வரியாக ஏற்றுக் கொண்டார்கள்.

முஸ்லிம்கள் ஹீராவின் உள்ளூர் வாசிகளுடன் மிகவும் பரந்த மனப்பான்மையோடு நடந்து கொண்டார்கள். இந்த அணுகுமுறையைக் கண்ட அக்கம் பக்கத்து நில உரிமையாளர்களும் தலைவர்களும் கூட ஜிஸ்யா வரி செலுத்த சம்மதித்து முஸ்லிம்களின் கீழ் இருப்பதை ஏற்றுக் கொண்டார்கள்.

இதை இஸ்லாமிய படையின் மாபெரும் படைத் தளபதி அவர்கள் தமது தலைமையகமாகவும், மையமாகவும் ஆக்கிக் கொண்டார்கள். அங்கிருந்து இஸ்லாமிய படைகளுக்கு ஒன்றுதிரள்வதற்கும் தற்காத்துக் கொள்வதற்கும், வரிசை அமைத்து இருப்பதற்கும் உதவி புரிவதற்குமான கட்டளைகள் பிறப்பிக்கப்பட்டு வந்தன. கைதிகளின் விவகாரங்கள் முறைப்படுத்துதல், திட்டம் வகுத்தல் மற்றும் அரசியல் ஆகியவற்றிற்கான மையமாக ஆக்கினார்கள். அங்கிருந்து ஹஸ்ரத் காலித் (ரலி) அவர்கள் ஜிஸ்யா வரியையும் மற்ற வரிகளையும் வசூலிப்பதற்காகப் பல்வேறு மாநிலங்களில் அதிகாரிகளை நியமித்தார்கள்.

எதிரிகளிடமிருந்து பாதுகாப்பாக இருக்கும் வண்ணம் எல்லைகளில் தலைவர்களை நியமித்தார்கள். தாமே அங்கே தங்கி அமைதி மற்றும் உறுதிப்பாட்டிற்கான அமைப்பை சீரமைப்பதில் ஈடுபட்டார்கள். அன்னாரைப் பற்றிய செய்தி சொத்துகளின் உரிமையாளர்களுக்கும் தலைவர்களுக்கும் கிடைத்தது. அவர்கள் அன்னாருடன் சமரசம் செய்து கொள்ள முன்வந்தனர்.

இவர்கள் வெற்றி பெறுகிறார்கள் என்று அந்த மக்கள் பார்த்தபோது சமரசம் செய்து கொண்டனர். ஈராக் மற்றும் அதன் சுற்றுவட்டாரத்தில் முஸ்லிம்களுடன் சமரசமோ அல்லது உடன்படிக்கையோ செய்து கொள்ளாதவர் எவரும் எஞ்சியிருக்கவில்லை.

ஹஸ்ரத் காலித் (ரலி) அவர்கள் ஓராண்டு வரை ஹீராவில் தங்கினார்கள். சிரியாவை நோக்கி செல்லும் முன் அதன் மேற்புற பகுதிகளிலும் கீழ்ப் பகுதிகளிலும் சுற்றுப் பயணம் செய்து வந்தார்கள். பாரசீகர்கள் அரசர்களை நியமிப்பதும் பணி நீக்கம் செய்வதுமாக இருந்தனர். அதாவது, அதற்கு எதிரில் பாரசீகர்கள் என்ன செய்தார்கள்? அங்கு அரசர்கள் உருவாவதும் பணி விலகுவதுமாக இருந்தது. ஈராக்கின் சூழல் சீரமைந்த பிறகு, ஹீராவுக்கும் டைகிரிஸ் நதிக்கும் இடையில் இருந்த அரேபிய பகுதிகளிலிருந்து பாரசீக அரசாங்கங்கள் முடிவுக்கு வந்த பிறகு, மேலும் பின்னால் இருந்து ஆபத்து ஏதும் இல்லாத நிலை ஏற்பட்ட பிறகு, ஹஸ்ரத் காலித் (ரலி) அவர்கள் நேரடியாக ஈரானைத் தாக்க எண்ணம் கொண்டார்கள். இதற்கிடையில், கிஸ்ரா அரசன் அர்த் ஷீர் மரணித்ததனால், ஈரான் அரசாங்கத்தில் குழப்பமும், அமளியும் ஏற்பட்டது.

அவனுடைய பிரதிநிதியைத் தேர்ந்தெடுப்பது சம்பந்தமாக அவர்களுக்கிடையில் கடுமையான கருத்து வேறுபாடு வெளிப்பட்டது. இந்த சந்தர்ப்பத்திலிருந்து பயனடைந்தவாறு ஹஸ்ரத் காலித் (ரலி) அவர்கள், அந்த மக்களின் மன்னர்களுக்கும், அமீர்மார்களுக்கும், முக்கியஸ்தர்களுக்கும் கடிதம் எழுதினார்கள். அந்த அரசர்களுக்கு எழுதியவாறு இவ்வாறு கூறினார்கள்:

இது காலித் பின் வலீத் தரப்பிலிருந்து பாரசீக அரசர்களுக்கு அனுப்பப்படும் கடிதம் ஆகும். அம்மா பஃது. எல்லாப் புகழும் அல்லாஹ்வுக்கே! அவன் உங்களது அமைப்பை சீர்குலைத்து விட்டான். உங்களது சூழ்ச்சியைப் பயனற்றதாக ஆக்கிவிட்டான். உங்களிடம் கருத்து வேறுபாட்டை ஏற்படுத்திவிட்டான். உங்களுடைய ஆற்றலை வலுவிழக்கச் செய்துவிட்டான். உங்களுடைய செல்வங்களைப் பறித்துக் கொண்டான். உங்களுடைய ஆதிக்கத்தையும், கண்ணியத்தையும் மண்ணோடு மண்ணாக்கி விட்டான். எனவே, உங்களுக்கு என்னுடைய இந்தக் கடிதம் கிடைக்கும்போது, இஸ்லாத்தை ஏற்றுகொள்ளுங்கள். பாதுகாப்பாகவும், அமைதியாகவும் இருப்பீர்கள் அல்லது உடன்படிக்கை செய்து ஜிஸ்யா வரி கொடுக்க சம்மதித்து விடுங்கள். இஸ்லாத்தை ஏற்றுக் கொள்ளவில்லை என்றால், சமரசத்திற்கான உடன்படிக்கை செய்து கொள்ளுங்கள். ஜிஸ்யா வரி கொடுக்க சம்மதித்து விடுங்கள். நீங்கள் இப்படி செய்தால், நாங்கள் உங்களையும் உங்களது பகுதியையும் விட்டுவிட்டு வேறு பக்கம் சென்றுவிடுவோம். இல்லையென்றால், எவனைத் தவிர வணக்கத்திற்குரியவர் எவரும் இல்லையோ அந்த அல்லாஹ்வின் மீது ஆணையாக! நீங்கள் வாழ்வை நேசிப்பதைப் போன்று மரணத்தை நேசிக்கக் கூடிய, மற்றும் நீங்கள் உலகின் மீது ஆசை கொள்ளும் அளவுக்கு மறுமை மீது ஆசைகொள்ளக் கூடிய ஒரு படையை அழைத்துக் கொண்டு நான் உங்களிடம் வருவேன்.

ஈரானிய அதிகாரிகளுக்கும், தலைவர்களுக்கும் கடிதம் எழுதியவாறு கூறினார்கள்: காலித் பின் வலீத் தரப்பிலிருந்து பாரசீக தலைவர்களுக்கு, இது காலித் பின் வலீத் தரப்பிலிருந்த ஈரானிய அதிகாரிகளுக்கும், தலைவர்களுக்கும் எழுதப்படும் கடிதம் ஆகும். நீங்கள் இஸ்லாத்தை ஏற்றுக் கொள்ளுங்கள். பாதுகாப்பாக இருப்பீர்கள் அல்லது ஜிஸ்யா வரி செலுத்துங்கள்: நாங்கள் உங்களது பாதுகாப்புக்கு பொறுப்பாவோம். இல்லையென்றால், நினைவிற் கொள்ளுங்கள்! நான் எப்படிபட்ட ஒரு சமுதாயத்துடன் உங்கள் மீது போர் தொடுக்கின்றேன் என்றால், உங்களுக்கு மது அருந்துவது எவ்வளவு பிரியமானதோ அந்த அளவு அந்த சமுதாயத்திற்கு மரணம் பிரியமானது ஆகும்.

ஹீரா வெற்றியின் மூலமாக, ஈராக்கை வெற்றிக் கொள்வது மற்றும் அதை இஸ்லாமிய அரசுக்குக் கீழ் கொண்டு வருவது தொடர்பான ஹஸ்ரத் அபூபக்ர் (ரலி) அவர்களின் ஆசையின் ஒரு பங்கு முழுமை அடைந்தது. அது ஈரான் மீது நேரடியாகத் தாக்குதல் தொடுப்பதற்கான முகவுரையாக இருந்தது. இது தொடர்பாக ஹஸ்ரத் காலித் (ரலி) அவர்கள் தமது பொறுப்பை நல்ல முறையில் நிறைவேற்றினார்கள். சிறிது காலத்திலேயே ஹீரா வரை சென்றடைந்துவிட்டார்கள். ஏனென்றால், ஈராக்குக்கு எதிரான அன்னார் (ரலி) அவர்களின் துவக்கம் முஹர்ரம் மாதம் ஹிஜ்ரி 12ஆம் ஆண்டில் காஸ்மா போர் மூலம் ஏற்பட்டது. மேலும், அதே ஆண்டு ரபீயுல் அவ்வல் மாதம் ஹிஜ்ரி 12ஆம் ஆண்டு ஹீரா வெற்றிக் கொள்ளப்பட்டது.

பிறகு, இதையடுத்து அம்பார் போர் மற்றும் ஸாத்துல் உயூன் போர் பற்றிய குறிப்பு உள்ளது. அது ஹிஜ்ரி 12ஆம் ஆண்டு நடைபெற்றது. ஈரானிய படை ஹீராவுக்கு முற்றிலும் அருகில் உள்ள அம்பார் மற்றும் அய்னுத் தம்ரில் முகாமிட்டு இருந்தது. அம்பார் என்பதும், பலக்குக்கு அருகில் உள்ள ஒரு நகரமாகும். அம்பார் உடைய பெயர்க் காரணம் குறித்து இவ்வாறு எழுதப்பட்டுள்ளது: அரபி மொழியில் தானியங்கள் மற்றும் பண்ட பாத்திரங்களை வைக்கும் கோட்டையை அம்பார் என்பார்கள். அங்கு உணவுப் பொருட்கள் அதிகமாக இருந்தன் காரணமாக, அந்த நகரம் அம்பார் என்று அழைக்கப்பட்டது.

அய்னுத் தம்ர் என்பது அம்பாருக்கு அருகில் கூஃபாவுக்கு மேற்கில் அமைந்திருக்கும் ஒரு நகரம் ஆகும்.இவ்வாறு எழுதப்பட்டுள்ளது: அந்த இடங்களில் ஈரானியப் படை இருந்ததன் காரணமாக, இஸ்லாமியப் படைக்குக் கடுமையான ஆபத்து உருவாகியிருந்தது. இந்த நிலைமைகளில் ஒருவேளை ஹஸ்ரத் காலித் பின் வலீத் (ரலி) அவர்கள் மௌனமாக ஹீராவில் அமர்ந்திருந்தார்கள் என்றால், வெளியேறிய ஈரானிய படைகளுக்கு எதிராக நடவடிக்கை மேற்கொள்ளாமல் இருந்திருந்தார்கள் என்றால், முஸ்லிம்கள் வெற்றிக் கொண்ட அந்தப் பகுதிகளை அதாவது ஹீராவை கை நழுவ விடும் நிலை ஏற்பட்டிருக்கும். அது மிகவும் கஷ்டப்பட்டு அவர்களின் கைக்கு வந்திருந்தது. எனவே, ஹஸ்ரத் காலித் பின் வலீத் (ரலி) அவர்கள் படைக்கு, ஆயத்தமாகுமாறு ஆணை பிறப்பித்தார்கள்.

ஹீரா மற்றும் அதன் சுற்று வட்டாரங்களில் நிலைமைகள் கட்டுக்குள் வந்த பிறகு, அமைதி நிலவிய பிறகு, ஹஸ்ரத் காலித் (ரலி) அவர்கள் ஹீராவில் ஹஸ்ரத் கஃகஃஆ பின் அம்ர் (ரலி) அவர்களைத் தமது பிரதிநிதியாக நியமித்துவிட்டு, தாம் ஹஸ்ரத் அய்யாஸ் பின் கனமுக்கு உதவுவதற்காகப் புறப்பட்டார்கள்.

ஹஸ்ரத் அய்யாஸ் பின் கனம் (ரலி) அவர்களை ஹஸ்ரத் அபூபக்ர் சித்தீக் (ரலி) அவர்கள் வடக்கிலிருந்து ஈராக்கை வெற்றி கொள்வதற்காக அனுப்பி வைத்திருந்தார்கள். அவர்களுக்கு ஹஸ்ரத் காலித் பின் வலீத் (ரலி) அவர்களுடன் சென்று இணைந்து கொள்ளுமாறு கட்டளையிட்டிருந்தார்கள். அம்பார் படையின் படைத் தளபதியாக, சாவாத் உடைய தலைவன் ஷீராஸாஸ் இருந்தான். அவன் தனது காலத்தில் மிகவும் புத்திசாலியாகவும் கண்ணியத்திற்குரியவனாகவும் அரேபியர்கள் மற்றும் அரேபியர் அல்லாதோர் மத்தியில் எல்லாருக்கும் பிடித்த அரபு அல்லாதவனாகவும் இருந்தான். சாவாத் என்பதும் மதாயினில் இருக்கும் ஒரு பிரசித்திப் பெற்ற இடத்தின் பெயர் ஆகும். எவ்வாறு இருப்பினும், எழுதப்பட்டுள்ளது:

அம்பார் வாசிகள் கோட்டைக்குள் அடைப்பட்டனர். அந்த மக்கள் கோட்டையைச் சுற்றி அகழி தோண்டியிருந்தனர். அது நீரால் நிரப்பப்பட்டிருந்தது. இந்த அகழி, கோட்டைச் சுவற்றுக்கு மிகவும் அருகில் இருந்தது. எந்தவொரு முஸ்லிமும் அதற்கு அருகில் சென்றாலும் கோட்டைச் சுவற்றில் நியமிக்கப்பட்டிருந்த எதிரி சிப்பாய்கள் அம்பெய்து, வலுக்கட்டாயமாக முஸ்லிம்களைப் பின்வாங்க நிர்பந்தித்து விடுவர். அவர்கள் இப்படியே செய்து கொண்டிருக்கையில், ஹஸ்ரத் காலித் (ரலி) அவர்கள் தமது படையின் முன் பகுதியை அழைத்துக் கொண்டு அங்கு வந்தடைந்தார்கள். அன்னார் அகழியைச் சுற்றி வந்து பார்த்தார்கள். கோட்டையின் பாதுகாப்புக்கான ஏற்பாடுகளை ஆய்வு செய்தார்கள்.

பிறகு, இறைவனால் தமக்கு அளிக்கப்பட்ட அறிவுக் கூர்மையால் ஒரு திட்டம் வகுத்தார்கள்.

ஹஸ்ரத் காலித் (ரலி) அவர்கள் தமது அம்பு எறிபவர்களிடம் சென்றார்கள். மிகவும் நன்றாகக் குறிபார்த்து எறியும் ஆயிரம் அம்பு எய்பவர்களைத் தேர்ந்தெடுத்தார்கள். அவர்களுக்கு வழிகாட்டல் வழங்கியவாறு இவ்வாறு கூறினார்கள்:

இவர்களுக்குப் போர் விதிகளைப் பற்றி ஒன்றும் தெரியவில்லை என்பதை

நான் காண்கிறேன். நீங்கள் அனைவரும் அவர்களின் கண்களை மட்டும் உங்களது அம்புகளின் இலக்காகக் கொள்ளுங்கள். அதைத் தவிர, வேறு எங்கும் எறியாதீர்கள். ஆக, அவர்கள் அனைவரும் ஒருசேர அம்பு எய்தினார்கள். அதற்குப் பிறகு, பன்முறை அவ்வாறே செய்தார்கள். அதன் விளைவாக அன்று ஏறத்தாழ ஆயிரம் கண்கள் குருடாயின. எனவே தான் இந்தப் போர் ஸாத்துல் உயூன் அதாவது கண்களின் போர் என்ற பெயராலும் பிரசித்திப் பெற்றிருக்கிறது.

அம்பார் வாசிகளின் கண்கள் குருடாகின்றன என்று எதிரிகளிடம் கூச்சல் ஏற்பட்டது. ஆனால், இவ்வாறு நடந்தும் கூட அம்பார் உடைய ஆட்சியாளன் நிபந்தனையின்றி ஆயுதங்களைப் போட்டு விடுவதற்குத் தயங்கினான். ஹஸ்ரத் காலித் பின் வலீத் (ரலி) அவர்கள் தமது படையின் சில பலவீனமான மெலிந்த ஒட்டகங்களை அழைத்துக் கொண்டு அகழியின் இடைஞ்சலான இடத்திற்கு வந்தார்கள். பிறகு, ஒட்டகங்களை அறுத்து அகழியில் போட்டுவிட்டார்கள். அதானல் அது நிரம்பிவிட்டது.

அந்த விலங்குகளால் ஒரு பாலம் உருவாகிவிட்டது. இப்போது முஸ்லிம்களும், இணைவைப்பாளர்களும் அகழியில் ஒருவர் மற்றவருக்கு முன்னால் இருந்தார்கள். இதைப் பார்த்த எதிரிகள் பின்வாங்கி கோட்டைக்குள் சென்று அடைந்து கொண்டனர்.

எனவே, அம்பார் உடைய ஆட்சியாளன் ஷீராஸாஸ் மீண்டும் ஹஸ்ரத் காலித் (ரலி) அவர்களுக்கு சமரசக் கடிதம் அனுப்பினான். மேலும், எந்தப் பொருளும் இல்லாத சவாரிகளின் ஒரு குழுவோடு இங்கிருந்து வெளியேறி தனது தங்குமிடத்தைச் சென்றடைவதற்கு தனக்கு அனுமதி வழங்க வேண்டும் என்று கேட்டுக் கொண்டான். ஹஸ்ரத் காலித் (ரலி) அவர்கள் அதற்கு சம்மதித்துவிட்டார்கள்.

இங்கு இதுவும் கவனிக்கத் தக்க விஷயம் ஆகும். அதாவது, எந்த வரலாற்றாசிரியர்களும், வாழ்க்கை வரலாற்றாசிரியர்களும், ஹஸ்ரத் காலித் (ரலி) அவர்கள் காட்டுமிராண்டித்தனமாக இரக்கமற்ற முறையில் நடந்து கொண்டார்கள் என்றும் மக்களைக் கொன்று குவித்துக் கொண்டே சென்றார்கள் என்றும் அன்னார் மீது அவதூறு சுமத்துகிறார்களோ அவர்கள் கவனம் செலுத்தத்தக்க விஷயம் ஆகும்.

அதாவது, எதிரிகள் கடுமையாகப் போர் புரிந்தபோதும், மீண்டும் மீண்டும் முன்வைத்த சமரசத்தையும் ஏற்றுக் கொள்ளாதபோதும், எதிரி மீது ஆதிக்கம் பெற்ற பிறகும் அவன் அங்கிருந்து செல்வதற்கு அனுமதி கேட்கும்போது, பிறகு மூன்று நாள்களுக்குத் தேவையான உணவுப் பொருட்களையும் உடன் எடுத்துச் செல்வதற்கு அன்னார் (ரலி) அனுமதியும் வழங்கிவிட்டார்கள். எந்த விதத்திலும் தடுக்கவில்லை. எனவே, அன்னார் (ரலி) அநீதி இழைத்து வந்தார்கள் என்ற இந்த விஷயம் அன்னார் மீது சுமத்தப்பட்ட பழியாகும் என்பதற்கு இது ஆதாரமாகும்.

ஷீராஸாஸ் அங்கிருந்து உயிரைக் காப்பாற்றிக் கொண்டு பஹ்மன் ஜாஸ்வியாவிடம் சென்றடைந்த போது, அவனுக்கு நடந்தவற்றைத் தெரியப்படுத்தினான். அப்போது அவன் ஷீராஸாஸைப் பழித்துரைத்தான். அதற்கு ஷீராஸாஸ் கூறினான்: நான் அங்கு அரேபிய வம்சத்தில் வந்த அறிவற்ற மக்களில் ஒருவனாக இருந்தேன். அவன் முஸ்லிம்களைப் பற்றிக் கூறவில்லை. மாறாக, அம்பார் வாசிகளில் அரபு கோத்திரத்தைச் சேர்ந்த மக்களைப் பற்றிக் கூறினான். அவர்களுக்கு ஒன்றும் தெரியாமல் இருந்தது. ஷீராஸாஸ் கூறினான்:

முஸ்லிம்கள் தங்களது உயிரைப் பற்றிக் கவலைப்படாமல் எங்கள் மீது தாக்குதல் தொடுத்துள்ளார்கள் என்று நான் கேள்விப்பட்டேன். எப்பொழுது ஒரு சமுதாயம் தனது உயிரைப் பற்றிக் கவலைப்படாமல் செயலாற்றுகிறதோ அப்பொழுது அதற்கு நிச்சயமாக வெற்றி கிடைத்துவிடுகிறது. ஆக, அவர்களுடன் எங்கள் படை மோதியபோது, அவர்கள் எங்களது கோட்டை மற்றும் தரையில் இருந்த படைகளில் ஆயிரம் கண்களைக் குத்திக் கிழித்து விட்டார்கள். இதிலிருந்து சமரசம் செய்து கொள்வதே சிறந்தது என்று எனக்குத் தெரிய வந்தது.

ஹஸ்ரத் காலித் பின் வலீத் (ரலி) அவர்களுக்கும் எல்லா முஸ்லிம்களுக்கும் அம்பார் உடைய நிலைமைகள் குறித்து மனநிறைவு ஏற்பட்ட பிறகு, அம்பார் வாசிகளும் அச்சமின்றி வெளிய வந்த பிறகு, அன்னார் அந்த மக்கள் அரபு மொழியை எழுதப்படிக்கக் கூடியவர்கள் என்பதைப் பார்த்தார்கள். அப்பொழுது ஹஸ்ரத் காலித் (ரலி) அவர்கள் அந்த மக்களிடம், நீங்கள் யார்? என்று கேட்டார்கள். அவர்கள் கூறினார்கள்:

நாங்கள் ஓர் அரபு சமுதாயம் தான். நாங்கள் எங்களுக்கு முன் இங்கு வசித்து வந்த அரேபியர்களிடம் வந்து இறங்கினோம். முதலில் வந்த அந்த அரேபியர்கள் பக்த் நஸ்ருடைய காலத்தில் வந்தார்கள். அவன் அரேபியர்களுக்கு வசிப்பதற்கு அனுமதி அளித்துவிட்டான். பிறகு, இங்கேயே இருந்துவிட்டோம். ஹஸ்ரத் காலித் (ரலி) அவர்கள், நீங்கள் யாரிடமிருந்து எழுதக் கற்றுக் கொண்டீர்கள்? என்று கேட்டார்கள்.

நாங்கள் அரபுக் கோத்திரமான பனூ அயாத்திடமிருந்து எழுதக் கற்றுக் கொண்டோம் என்று அவர்கள் கூறினர். அதற்குப் பிறகு, ஹஸ்ரத் காலித் (ரலி) அவர்கள் அம்பார் உடைய அக்கம் பக்கத்து மக்களுடனும் சமரசம் செய்து கொண்டார்கள்.

பிறகு, அய்னுத் தம்ர் போரும் ஹிஜ்ரி 12ஆம் ஆண்டு நடைபெற்றது. இதைப் பற்றிய குறிப்பு இவ்வாறு வருகிறது: ஹஸ்ரத் காலித் (ரலி) அவர்கள் அம்பாரை வெற்றிக் கண்டு முடித்தப் பிறகு, அன்னார் அதற்கு அருகில் உள்ள பகுதியான அய்னுத் தம்ர் செல்ல நாடினார்கள்.

அது ஈராக் மற்றும் சிரியாவின் பாலைவனத்தின் ஓரத்தில் அமைந்திருக்கிறது. அம்பாரிலிருந்து அய்னுத் தம்ர் சென்றடைவதற்கு மூன்று நாட்கள் ஆயின. ஈரான் தரப்பிலிருந்து அந்த இடத்தின் ஆட்சியாளனாக மஹ்ரான் பின் பஹ்ஸாம் இருந்தான். அவன் அரபு அல்லாதவர்களின் ஒரு மிகப் பெரும் படையுடன் அங்கு இருந்தான்.

ஈரானியப் படை போக, அரபு நாட்டின் பல்வேறு காட்டரபி கோத்திரங்களும் அங்கு இருந்தன. அவர்களின் தலைவனாக அக்கா பின் அபீ அக்கா என்பவன் இருந்தான். அந்த மக்கள் ஹஸ்ரத் காலித் (ரலி) அவர்கள் பற்றி கேள்விப்பட்டபோது, அக்கா மஹ்ரானிடம் அரேபியர்களுக்கு அரேபியர்களுடன் மிகவும் நன்றாகப் போரிடத் தெரியும். எனவே, நீங்கள் எங்களை காலிதோடு மோதவிடுங்கள் என்று கூறினான்.

அவனை எங்களுக்கு நன்றாகத் தெரியும். நாங்கள் அவர்களுடன் போர் புரிவோம் என்று நினைத்தான். மஹ்ரான் கூறினான்:

நீங்கள் சரியாகக் கூறுகிறீர்கள். நாங்கள் அரேபியர் அல்லாதவர்களோடு போரிடுவதில் எவ்வளவு கைதேர்ந்தவர்களோ அந்த அளவே நீங்கள் அரேபியர்களுடன் போரிடுவதில் கைதேர்ந்தவர்கள் ஆவீர்கள்.

இவ்வாறு அவன் அக்காஃவை ஏமாற்றினான். மேலும், அவன் மூலமாகத் தம் மக்களைத் தற்காத்துக் கொண்டான். அவன் கூறினான்:

நீங்கள் அவர்களுடன் போரிடுங்கள். உங்களுக்கு எங்கள் தேவை ஏற்பட்டால், நாங்கள் உங்களுக்கு உதவி செய்வோம். அக்காஃ ஹஸ்ரத் காலித் (ரலி) அவர்களோடு போரிடுவதற்குச் சென்ற பிறகு, அரபு அல்லாதவர்கள் அக்காஃ தொடர்பாக மிகவும் கடுமையாகப் பேசியவாறு மஹ்ரானிடம் கூறினார்கள்: எந்த விஷயம் உன்னை அவனிடம் இவ்வாறு பேச வைத்தது? அவன் கூறினான்:

நீங்கள் என்னை விட்டு விடுங்கள். நான் உங்களுக்கு சிறந்ததும், முஸ்லிம்களுக்குத் தீயதும் ஆனதைத்தான் செய்துள்ளேன். நிச்சயமாக, உங்களிடம் எப்படிப்பட்ட ஒரு நபர் வருகிறார் என்றால், அவர் உங்களுடைய அரசர்களைக் கூட கொன்றுவிட்டார்.

ஹஸ்ரத் காலித் (ரலி) அவர்களைப் பற்றிக் கூறினான்.

அவர் மிகவும் அருமையான படைத் தளபதி ஆவார். உங்களது மேன்மையையும், ஆட்சியையும் தூள்தூளாக்கி விட்டார். நானோ அக்காஃவை அவர்களுக்கு எதிராகக் கேடயமாகப் பயன்படுத்தி இருக்கிறேன். அவர்கள் காலிதுக்கு எதிராக வெற்றி பெற்றுவிட்டால், இந்த வெற்றி உங்களுடையதாக இருக்கும். ஆனால், அதற்கு நேர்மாற்றமாக நடந்தால் முஸ்லிம்கள் பலவீனமடைந்த நிலையில் நீங்கள் முஸ்லிம்களை எதிர்க்கச் செல்வீர்கள். பிறகு, நாம் அவர்களுடன் போரிட்டால் நாம் பலம் வாய்ந்தவர்களாகவும் அவர்கள் பலவீனமானவர்களாகவும் இருப்பார்கள்.

இதைக் கேட்ட அவர்கள் மஹ்ரானின் கருத்து மேலானது என்பதை ஒப்புக் கொண்டார்கள். மஹ்ரான் அங்கேயே அய்னுத் தம்ரிலேயே இருந்தான். அக்காஃ ஹஸ்ரத் காலித் (ரலி) அவர்களோடு போர் புரிவதற்காக வழியில் முகாமிட்டு விட்டான்.

அக்காஃ அப்போது தனது படையைத்தான் வரிசைப்படுத்திக் கொண்டிருந்தான். அதற்குள் ஹஸ்ரத் காலித் (ரலி) அவர்கள் தாமே அவன் மீது தாக்குதல் தொடுத்துவிட்டார்கள். அவனை கைது செய்துவிட்டார்கள். அவனது படை போர்புரியாமலேயே தோற்று ஓடியது. அவர்களில் பெரும்பாலார் கைது செய்யப்பட்டனர்.

இந்தச் செய்தி மஹ்ரானுக்குக் கிடைத்தபோது, அவன் தனது படையை அழைத்துக் கொண்டு தப்பி ஓடிவிட்டான். அவர்கள் கோட்டையை விட்டுவிட்டனர். தோற்றுப் போனவர்கள் அந்தக் கோட்டையை சென்றடைந்து அதில் தஞ்சமடைந்த பிறகு, ஹஸ்ரத் காலித் (ரலி) அவர்கள் அந்த மக்களைச் சுற்றிவளைத்துவிட்டார்கள். அதனால், அவர்கள் ஹஸ்ரத் காலித் (ரலி) அவர்களிடம் உயிருக்கு உத்திரவாதம் வழங்கக் கோரினர். ஆனால், அன்னார் நிராகரித்து விட்டார்கள். அவர்கள் அன்னாரது தீர்ப்பை ஏற்றவாறு ஆயுதங்களைப் போட்டுவிட்டனர்.

அன்னார் அவர்களை சிறைபிடித்தார்கள். அக்காஃவையும் அவனோடு யாரெல்லாம் முஸ்லிம்களுக்கு எதிராகப் போரில் கலந்து கொண்டிருந்தார்களோ அவர்கள் அனைவரையும் கொன்றுவிட்டார்கள். கோட்டையில் இருந்தவர்களைச் சிறைபிடித்துக் கொண்டார்கள். கோட்டையில் இருந்த பொருட்களைப் போர்ச் செல்வங்களாக எடுத்துக் கொண்டார்கள். அன்னார் அவர்களின் தேவாலயத்திற்குள் நாற்பது ஆண் மக்களைக் கண்டார்கள். அவர்களைக் கிறித்தவர்கள் பிணையக் கைதிகளாக ஆக்கி வைத்திருந்தனர்.

இந்த ஆண் மக்களுக்கு இஸ்லாமிய வரலாற்றில் ஏன் முக்கியத்துவம் உள்ளது என்றால், மேலும் அவர்களின் சந்ததிகளில் எத்தகைய பெரும் பெரும் மனிதர்கள் தோன்றினார்கள் எனில் அவர்கள் அந்தக் காலத்திலும் பிற்காலத்தின் வரலாற்றிலும் ஆழமான மற்றும் அழியாத வரைபடத்தை விட்டுச் சென்றார்கள்.

அந்த ஆண்மக்களில் முஹம்மத் பின் ஸீரீன் (ரஹி) அவர்களின் தந்தையார் ஸீரீன், மூஸா பின் நுஸைர் அவர்களின் தந்தையார் நுஸைர், ஹஸ்ரத் உஸ்மான் (ரலி) அவர்களால் விடுவிக்கப்பட்டிருந்த அடிமை ஹும்ரான் ஆகியோரும் இருந்தார்கள். ஸீரீன் ஈராக்கைச் சேர்ந்தவர் ஆவார்கள். அய்னுத் தம்ர் போரில் கைதானார்கள். ஹஸ்ரத் அனஸ் பின் மாலிக் (ரலி) அவர்களின் அடிமை ஆனார்கள். அவர்கள் மிகப் பெரிய கைத் தொழில் கலைஞராக ஆக இருந்தார்கள்.

அவர்கள் ஹஸ்ரத் அனஸ் (ரலி) அவர்களிடம் விடுதலைக்கான உடன்படிக்கை செய்து விடுதலை அடைந்தார்கள். அவர்களின் மகனின் பெயர் முஹம்மத் பின் ஸீரீன் ஆகும். அவர்கள் புகழ்பெற்ற தாபிஃ ஆவார்கள்.

தஃப்ஸீர், ஹதீஸ், ஃபிக்ஹ் மற்றும் கனவுகளுக்கு விளக்கம் அளித்தல் முதலியவற்றில் புலமை பெற்ற இமாமாக இருந்தார்கள். இந்த முஹம்மத் பின் ஸீரீன் அவர்கள் போரில் கைதியாக்கப்பட்ட அந்த நபருடைய மகனாவார்கள். பிறகு, அவர்கள் விடுதலை பெற்றிருந்தார்கள்.

பிறகு, நுஸைர் இருந்தார்கள். இவர்கள் மூஸா பின் நுஸைரின் தந்தையார் ஆவார்கள். இவர்கள் பனு உமய்யாவின் கைதிகளில் ஒருவராக இருந்தார்கள். பனூ உமய்யாவின் ஒரு நபர் அன்னாரை விடுவித்திருந்தார். அன்னார் தமது மகன் மூஸாவால் பிரசித்திப் பெற்றுள்ளார்கள். மூஸா பின் நுஸைர் அவர்கள் வட ஆஃப்ரிக்காவில் புகழ் பெற்றார்கள்.

தாரிக் பின் ஸியாத் அவர்களுடன் இணைந்து ஸ்பெயினில் இஸ்லாமிய ஆட்சியை ஏற்படுத்துவதில் மிகப் பெரும் பங்காற்றினார்கள். பிறகு, ஹும்ரான் பின் ஆபான் அவர்களும் அய்னுத் தம்ர் போரின் கைதிகளில் ஒருவராக இருந்தார்கள். அன்னார் யூதர்களைச் சேர்ந்தவராக இருந்தார்கள். அன்னார் இஸ்லாத்தை ஏற்றுக் கொண்டார்கள். ஹஸ்ரத் உஸ்மான் (ரலி) அவர்கள் அன்னாரை விடுதலை செய்திருந்தார்கள். அன்னார் ஹஸ்ரத் உஸ்மான் (ரலி) அவர்களுக்கு நெருக்கமானவர்களில் ஒருவராக இருந்தார்கள். அன்னார் ஹிஜ்ரி 41ஆம் ஆண்டு சில காலங்களுக்கு பஸராவின் ஆளுநராக ஆனார்கள். பிற்காலத்தில் பனூ உமய்யாவின் ஆட்சியில் பெரும் பெயரை சம்பாதித்தார்கள்.

ஹஸ்ரத் காலித் (ரலி) அவர்கள் வெற்றியின் நற்செய்தியையும் போர்ச் செல்வங்களில் ஐந்தில் ஒரு பங்கையும் ஹஸ்ரத் அபூபக்ர் (ரலி) அவர்களிடம் அனுப்பி வைத்துவிட்டார்கள். அம்பார் மற்றும் அய்னுத் தம்ர் வெற்றிக்குப் பிறகு, ஹஸ்ரத் காலித் (ரலி) அவர்கள், வலீத் பின் அக்பாவிடம் வெற்றியின் நற்செய்தியுடன் போர்ச் செல்வங்களில் ஐந்தில் ஒரு பங்கை கொடுத்து ஹஸ்ரத் அபூபக்ர் (ரலி) அவர்களிடம் அனுப்பி வைத்தார்கள்.

அவர் மதீனா சென்றடைந்து அன்னாருக்கு நிலைமைகள் அனைத்தையும் தெரியப்படுத்தினார். மேலும், கூறினார்கள்: ஹஸ்ரத் காலித் (ரலி) அவர்கள் தங்களுடைய கட்டளையை ஒருபுறம் வைத்த வண்ணம் ஹீராவை விட்டுவிட்டு அம்பார் மற்றும் அய்னுத் தம்ர் மீது தாக்குதல் தொடுத்ததன் காரணம் என்னவென்றால், அவர்கள் ஹீராவில் தங்கி முழுமையாக ஓராண்டு ஆகியிருந்தது.

அங்கு ஹீராவில் காத்திருக்குமாறு ஹஸ்ரத் அபூபக்ர் (ரலி) அவர்கள் வழிகாட்டல் வழங்கியிருந்தார்கள். ஆனால், எவ்வாறு இருப்பினும் இதையே அந்த சூழலில் பொருத்தமானதாகக் கருதி ஹஸ்ரத் காலித் (ரலி) அவர்கள் அவ்வாறு செய்தார்கள். ஓராண்டு ஆகியிருந்தது. அய்யாஸ் எப்பொழுது தூமத்துல் ஜந்தலில் பணியை முடித்துவிட்டு ஹஸ்ரத் காலித் (ரலி) அவர்களுக்கு உதவுவதற்காக ஹீரா வந்தடைவார் என்று தெரியாமல் இருந்தது. தாமதம் ஆகியிருந்தது. அய்யாஸ் அங்கு வந்தடையவில்லை.

ஹஸ்ரத் அபூபக்ர் (ரலி) அவர்களும், அய்யாஸ் உடைய சோம்பலான நடவடிக்கையினால் வருத்தம் அடைந்து இருந்தார்கள். அவர் முஸ்லிம்களின் துணிவைக் குறைப்பதாக அன்னார் (ரலி) கருதினார்கள். ஹஸ்ரத் காலித் (ரலி) அவர்கள் ஈராக்கில் மேற்கொண்ட அந்த நடவடிக்கைகள் பற்றி எதிரிகளுக்குத் தகவல் கிடைத்திருந்தால், நிச்சயமாக அவர்கள் அய்யாஸ் உடைய பலவீனத்தால் பலனைடந்தவாறு முஸ்லிம்களுக்குக் கடுமையான இழப்பு ஏற்படுத்தியிருப்பார்கள்.

அடுத்து, தூமத்துல் ஜந்தல் போர். இதுவும் ஹிஜ்ரி 12ஆம் ஆண்டு நடைபெற்றது. தூமத்துல் ஜந்தல் தமாஸ்கஸ்ஸில் இருந்து அந்தக் காலத்தில் இருந்த பயண வழிவகைகளுக்கு ஏற்ப ஐந்து இரவுகள் மற்றும் மதீனாவிலிருந்து பதினைந்து இரவுகள் பயணத் தொலைவில் உள்ள ஒரு நகரமாகும். சிரியாவின் இந்த நகரம் மதீனாவுக்கு மிகவும் அருகில் இருந்தது.

ஹஸ்ரத் அபூபக்ர் (ரலி) அவர்கள் தூமாவுக்கு அனுப்பியிருந்த அய்யாஸ் பின் கனம் அவர்களுக்கு நீண்ட காலம் வரை எதிரிகள் தரப்பிலிருந்து எதிர்ப்பை எதிர்கொள்ள வேண்டி வந்தது. எனவே, ஹஸ்ரத் காலித் (ரலி) அவர்கள், வலீத் பின் அக்பாவை அய்னுத் தம்ர் வெற்றியின் செய்தியுடன் ஹஸ்ரத் அபூபக்ர் (ரலி) அவர்களிடம் அனுப்பி வைத்தபோது, ஹஸ்ரத் அபூபக்ர் (ரலி) அவர்களுக்கு அய்யாஸைப் பற்றிய கவலை ஏற்பட்டது.

எனவே அன்னார் வலீத் பின் அக்பாவை அய்யாஸுக்கு உதவிட அனுப்பி வைத்துவிட்டார்கள். வலீத் பின் அக்பா அவர்கள் அய்யாஸ் அவர்களிடம் சென்றடைந்த போது, எதிரிகள் ஹஸ்ரத் அய்யாஸ் அவர்களை முற்றுகையிட்டு அவர்களின் வழியை அடைத்து வைத்திருப்பதையும் கண்டார்கள். வலீத் பின்

**நபிமொழியிலிருந்து...**

சொர்க்கத்தின் வாசல்களில் ஒரு வாசலின் பெயர் தர்மத்தின் வாசல் ஆகும். தான, தர்மங்கள் செய்யக்கூடியவர்கள் அதன் வழியாக நுழைவர். (முஸ்லிம்)

S.S.H. Muhammed Lebbai
(Ameer, Melapalayam)

**திருக்குர்ஆனிலிருந்து...**

நான் ஜின்களையும், மனிதர்களையும் என்னை வணங்குவதற்காகவே படைத்துள்ளேன். (51:57)

A. Nasir Ahmad
(District Ameer, Melapalayam)

**திருக்குர்ஆனிலிருந்து...**

அவர்கள் இரவு நேரத்தில் குறைவாகவே துயில் கொண்டனர். (54:18)

A. Shamsul Alam
(Gen.Sec. Melapalayam)

அக்பா அவர்கள் ஹஸ்ரத் அய்யாஸ் அவர்களிடம், சிலவேளை படையின் அதிக எண்ணிக்கைக்கு நிகராக, அறிவால் செய்யப்படும் ஒரு விஷயம் அதிகம் பயனுள்ளதாக அமையும். நீங்கள் ஹஸ்ரத் காலித் பின் வலீத் (ரலி) அவர்களிடம் தூதுவரை அனுப்பி அவர்களிடம் உதவி கோருங்கள் என்று கூறினார்கள்.

ஹஸ்ரத் அய்யாஸ் அவர்களுக்கு வலீத் அவர்களின் பேச்சைக் கேட்பதைத் தவிர, வேறு வழியிருக்கவில்லை. ஏனென்றால், அன்னார் தூமத்துல் ஜந்தல் சென்றடைந்து ஓராண்டு ஆகியிருந்தது. அப்போது வரை, வெற்றிக்கான எந்தத் தோற்றமும் தென்படவில்லை. ஹஸ்ரத் அய்யாஸ் அவர்கள் அவ்வாறே செய்தார்கள். அவர்களின் தூதுவர் உதவி கோர, ஹஸ்ரத் காலித் (ரலி) அவர்களிடம் சென்றடைந்தபோது, அந்நேரத்தில் அய்னுத் தம்ர் வெற்றிக் கொள்ளப்பட்டிருந்தது. அவர்கள் ஹஸ்ரத் அய்யாஸ் அவர்களின் பெயரில் ஒரு சிறு கடிதத்தைக் கொடுத்து, அவர்களது கவலை சற்று குறையட்டும் என்று தூதுவரை உடனடியாகத் திருப்பி அனுப்பிவிட்டார்கள். கடிதத்தில் இவ்வாறு எழுதியிருந்தார்கள்:

சிறிது காத்திருங்கள். சவாரிகள் தங்களை வந்தடைகின்றன. அவற்றின் மீது சிங்கங்கள் பயணித்திருக்கும். வாள்கள் ஜொலித்துக் கொண்டிருக்கும். 7 படைகள் கூட்டங்கூட்டமாக வந்தடையும்.

அடுத்து, ஹஸ்ரத் காலித் பின் வலீத் (ரலி) அவர்கள் தூமத்துல் ஜந்தலுக்குப் புறப்பட்டது பற்றி இவ்வாறு வருகிறது: ஹஸ்ரத் காலித் (ரலி) அவர்கள் அய்னுத் தம்ரை வென்று முடித்தப் பிறகு, அதில் அவைம் பின் காஹில் அஸ்லமீயைக் கண்காளிப்பாளராக நியமித்தார்கள். அய்னுத் தம்ரில் இருந்த தமது படையை உடன் அழைத்துக் கொண்டு தாம் தூமத்துல் ஜந்தலை நோக்கிப் பயணமானார்கள். இந்த முன்னூறு மைல் பயணத் தொலைவை ஹஸ்ரத் காலித் பின் வலீத் (ரலி) அவர்கள் பத்து நாட்களுக்கும் குறைவான காலத்தில் கடந்தார்கள். தூமா வாசிகளுக்கு ஹஸ்ரத் காலித் (ரலி) அவர்களின் வருகை பற்றிய தகவல் கிடைத்தது.

அவர்கள் தமது தோழமைக் கோத்திரத்திடம் உதவி கோரினர். இந்தக் கோத்திரங்கள் தம்முடன் இன்னும் பல கோத்திரங்களை இணைத்துக் கொண்டு தூமத்துல் ஜந்தல் சென்றடைந்தன. அப்போது அவர்களின் எண்ணிக்கை ஓராண்டுக்கு முன் ஹஸ்ரத் ஙியாத், அவர்களை எதிர்ப்பதற்காக வந்தபோது இருந்ததை விட பன்மடங்கு அதிகமாக இருந்தது. தூமத்துல் ஜந்தல் படை இரு பெரும் பிரிவுகளாகப் பிரிந்து இருந்தது. படைக்கு இரு தலைவர்கள் இருந்தனர். ஒருவன் உகைதர் பின் அப்துல் மலிக்(ஆவான்), மற்றொருவன் ஜூதீ பின் ரபிஆ (ஆவான்).

அவர்களுக்கு ஹஸ்ரத் காலித் (ரலி) அவர்களின் வருகைக்கான தகவல் கிடைத்தபோது, அவர்களிடம் கருத்து வேறுபாடு ஏற்பட்டுவிட்டது. உகைதர் கூறினான்: எனக்கு காலிதைப் பற்றி நன்றாகத் தெரியும். அவரை விட புத்திசாலி எவரும் இல்லை. அவரைவிட போரில் துரிதமானவரும் எவரும் இல்லை. எந்த சமுதாயம் காலிதுடன் மோதுகிறதோ அது குறைவானதாக இருந்தாலும் சரி. அதிகமானதாக இருந்தாலும் சரி. கண்டிப்பாகத் தோல்வி அடையும். நீங்கள் எனது ஆலோசனைப்படி செயல்படுங்கள். அவர்களுடன் சமாதானம் செய்து கொள்ளுங்கள்.

ஆனால், அவர்கள் அதை நிராகரித்துவிட்டார்கள். அதற்கு உகைதர் கூறினார்: என்னால் காலிதுடன் போர் புரிவதற்கு உங்களுக்கு ஒத்துழைப்பு வழங்க முடியாது. நீங்கள் ஆகட்டும். உங்கள் வேலையாகட்டும். இதைக் கூறிவிட்டு அவர் அங்கிருந்து சென்றுவிட்டார். அதைப் பற்றி ஹஸ்ரத் காலித் (ரலி) அவர்களுக்குத் தகவல் கிடைத்துவிட்டது. அன்னார் அவரை வழியில் தடுக்க ஆஸிம் பின் அம்ர் அவர்களை அனுப்பினார்கள்.

அவன் சமாதானம் செய்து கொள்ள சம்மதிக்கவில்லை. மாறாக, அங்கிருந்து விட்டுவிட்டுச் சென்றுவிட்டான். தனது பகுதியை நோக்கிச் சென்று கொண்டிருந்தான். ஆஸிம் அவர்கள் சென்று உகைதாரைப் பிடித்தார்கள். அவன் நீங்கள் என்னை உங்களது அமீர் காலித் அவர்களிடம் அழைத்து செல்லுங்கள் என்று கூறினான். அவன் ஹஸ்ரத் காலித் (ரலி) அவர்களுக்கு முன் நிறுத்தப்பட்டபோது, அன்னார் உகைதரைக் கொல்லச் செய்தார்கள். அவனது பொருட்கள் அனைத்தையும் கைப்பற்றிக் கொண்டார்கள். அப்போது கைதி ஆக்கி பின்னர் கொன்றுவிட்டார்கள். இதற்கு என்ன காரணம்?

உகைதரைக் கைது செய்த பிறகு ஏன் கொல்லப்பட்டார்? என்ற கேள்வி எழுகிறது. அதற்கான காரணம் இவ்வாறு கூறப்பட்டுள்ளது:

தபூக் போரின்போது, ஹஸ்ரத் ரஸூலுல்லாஹ் (ஸல்) அவர்கள், ஹஸ்ரத் காலித் (ரலி) அவர்களை உகைதரிடம் அனுப்பி வைத்தார்கள். ஹஸ்ரத் காலித் (ரலி) அவர்கள் அவனைக் கைது செய்து ஹஸ்ரத் ரஸூலுல்லாஹ் (ஸல்) அவர்களிடம் கொண்டு வந்தார்கள். ஹஸ்ரத் ரஸூலுல்லாஹ் (ஸல்) அவர்கள் அவன் மீது கருணைக் காட்டி அவனை விட்டுவிட்டார்கள். மேலும், அவனிடம் உடன்படிக்கை எழுத வைத்தார்கள். ஆனால், அவன் அதற்குப் பிறகு உடன்படிக்கையை மீறிவிட்டான். மதீனாவின் ஆட்சிக்கு எதிராக கிளர்ச்சி செய்துவிட்டான்.

ஹஸ்ரத் காலித் (ரலி) அவர்கள் தூமத்துல் ஜந்தல் வரும் செய்தி உகைதருக்கு கிடைத்தபோது, அவன் தமது சமுதாயத்துக்குத் தோள் கொடுப்பதைவிட்டு விட்டுப் புறப்பட்டுவிட்டான். ஏற்கனவே கூறப்பட்டது போன்று, ஹஸ்ரத் காலித் (ரலி) அவர்களுக்கு தூமத்துல் ஜந்தல் செல்லும் வழியில் அதைப் பற்றி தெரிய வந்தது. அன்னார் (ரலி) அவனைக் கைது செய்தார்கள். அவனது முந்தைய துரோகத்தின் காரணமாக ஹஸ்ரத் காலித் (ரலி) அவர்கள் அவனைக் கொல்லுமாறு கட்டளையிட்டார்கள். மேலும், அவன் கொல்லப்பட்டான்.

இவ்வாறு அல்லாஹ், அவனை அவனது நம்பிக்கைத் துரோகம் மற்றும் நன்றி கேட்டின் காரணத்தினால் அழித்துவிட்டான். சில அறிவிப்புகளில் இருந்து இதுவும் தெரிய வருகிறது. அதாவது, அவனை கைது செய்து மதீனாவுக்கு அனுப்பி வைக்கப்பட்டான்.

ஹஸ்ரத் உமர் (ரலி) அவர்களின் காலத்தில் அவனுக்கு விடுதலை கிடைத்தது. அவன் மதீனாவிலிருந்து ஈராக் சென்றுவிட்டான். அங்கு அய்னுத் தம்ர் எனும் இடத்தில் தூமாவிலேயே தங்கினான். கடைசி வரை அங்கேயே இருந்தான். இந்த இரண்டு அறிவிப்புகள் உள்ளன.

தூமா வாசிகளுடனான போர் பற்றிய சம்பவம் வருகிறது. எவ்வாறு இருப்பினும், எழுதப்பட்டுள்ளது: ஹஸ்ரத் காலித் (ரலி) அவர்கள் முன்னேறிச் சென்று தூமாவைச் சென்றடைந்தார்கள். ஹஸ்ரத் காலித் (ரலி) அவர்கள் தூமாவைத் தமக்கும், ஹஸ்ரத் அய்யாஸ் (ரலி) அவர்களின் படைக்கும் நடுவில் நின்றார்கள். தூமா வாசிகளுக்கு உதவுவதற்காக வந்திருந்த கிறித்தவ அரேபியர்கள் கோட்டையின் சுற்றுப்புறத்தில் வெளிப்புறமாக நின்றார்கள். ஏனென்றால், கோட்டையில் அவர்களுக்கு இடம் இருக்கவில்லை. ஹஸ்ரத் காலித் (ரலி) அவர்கள் பொறுமையாகப் படையை வரிசைப் படுத்திவிட்ட பிறகு, தூமாவின் தலைவர்கள் கோட்டையை விட்டு வெளியேறி ஹஸ்ரத் காலித் (ரலி) அவர்கள் மீது தாக்குதல் தொடுத்துவிட்டனர்.

இரு தரப்பினருக்கும் மத்தியில் மும்முரமான போர் நடைபெற்றது. இறுதியில் ஹஸ்ரத் காலித் (ரலி) அவர்களும், ஹஸ்ரத் அய்யாஸ் (ரலி) அவர்களும் தங்களை எதிர்த்துப் போரிட்டவர்களைத் தோற்கடித்தனர். ஹஸ்ரத் காலித் (ரலி) அவர்கள் ஜூதி எனும் ஒரு தலைவனையும், ஹஸ்ரத் அக்ரா பின் ஹாபிஸ் (ரலி) அவர்கள் கல்ப் கோத்திரத்தின் தலைவனான வதீயாவையும் சிறைபிடித்தார்கள். மற்றவர்கள் பின் சென்று கோட்டைக்குள் அடைபட்டு கொண்டுவிட்டனர். ஆனால், கோட்டையில் அதிக இடம் இருக்கவில்லை. கோட்டை நிறைந்ததும், உள்ளிருந்தவர்கள் பல மக்களை வெளியே விட்டு விட்டு கோட்டைக் கதவை மூடிக் கொண்டனர். அதனால், வெளியிலிருந்த மக்கள் கவலையோடு திரிய ஆரம்பித்தனர்.

ஆஸிம் பின் அம்ர் அவர்கள் கூறினார்கள்: பனூ தமீம் மக்களே! உங்களுடைய தோழமைக் கோத்திரமான கல்புக்கு உதவி புரியுங்கள். அவர்களுக்கு அடைக்கலம் வழங்குங்கள். ஏனென்றால், நீங்கள் அவர்களுக்கு உதவுவதற்கு இதுபோன்ற ஒரு சந்தர்ப்பம் இனி ஒருபோதும் கிடைக்காது. இதைக் கேட்டு பனூ தமீம் கோத்திரத்தினர் அவர்களுக்கு உதவி செய்தனர். அன்று ஆஸிம் உயிருக்கு உத்திரவாதம் தந்ததனால் கல்ப் கோத்திரத்தின் உயிர் தப்பியது. கோட்டை பக்கமாக பின்வாங்கிச் சென்றவர்களை ஹஸ்ரத் காலித் (ரலி) அவர்கள் பின்தொடர்ந்தார்கள்.

அன்னார் எத்தனை பேரைக் கொன்றார்கள் என்றால், அவர்களின்

சடலங்களால் கோட்டைக் கதவு அடைபட்டுவிட்டது. பிறகு, ஜூதியையும் அவனுடன் இருந்த மற்ற கைதிகளையும் கொன்றுவிட்டார்கள். கல்புடைய கைதிகள் மட்டும் தப்பிவிட்டனர். ஏனெனில், ஆஸிம், அக்ரா மற்றும் பனூ தமீம் கோத்திரத்தினர் ஆகியோர் நாங்கள் அவர்களுக்கு உயிருக்கான உத்திரவாதம் கொடுத்துவிட்டோம் என்று கூறியிருந்தார்கள். அடுத்து, ஹஸ்ரத் காலித் (ரலி) அவர்கள் கோட்டைக் கதவைத் தொடர்ந்து வலம் வந்து கொண்டிருந்தார்கள். எதுவரை என்றால், அதை உடைத்துவிட்டு பெருமூச்சு விட்டார்கள். முஸ்லிம்கள் கோட்டைக்குள் நுழைந்துவிட்டார்கள். போர் வீரர்கள் கொல்லப்பட்டனர். சிறுவயதினர் சிறைபிடிக்கப்பட்டனர்.

வெற்றிக்குப் பிறகு, ஹஸ்ரத் காலித் (ரலி) அவர்கள் அக்ரா பின் யாபிஸ் அவர்களை அம்பாருக்குத் திரும்பிச் செல்லுமாறு கட்டளையிட்டார்கள். அன்னார் தூமத்துல் ஜந்தலில் தங்கினார்கள். தூமத்துல் ஜந்தல் வெற்றிக் கொள்ளப்பட்டதனால், முஸ்லிம்களுக்கு போர் அடிப்படையில் மிகவும் முக்கியமான அந்தஸ்து கிடைத்துவிட்டது. காரணம், தூமத்துல் ஜந்தல் எப்படிப்பட்ட வழியில் அமைந்திருந்தது என்றால், அங்கிருந்து மூன்று வழிகளில் முக்கிய பாதைகள் சென்றன. தெற்கில் தீவைப் போன்று அரபு நாடும், வட கிழக்கில் ஈராக்கும், வடமேற்கில் சிரியாவும் இருந்தன.

இயல்பாகவே இந்த நகரம் ஹஸ்ரத் அபூபக்ர் (ரலி) அவர்களின் கவனத்திற்கும், மேலும் அன்னாரின் படையின் கவனம் மற்றும் ஏற்பாட்டிற்கும் தகுதி வாய்ந்ததாக இருந்தது. அது ஈராக்கில் போர் புரிய ஆயத்தமாக இருந்தது. சிரியாவின் எல்லையில் நின்று கொண்டிருந்தது. இந்தக் காரணத்தினாலேயே, ஹஸ்ரத் அய்யாஸ் (ரலி), தூமத்துல் ஜந்தலிலிருந்து நகரவில்லை. மாறாக, அங்கேயே நிலைத்து நின்றார்கள். ஹஸ்ரத் காலித் (ரலி) அவர்கள் அங்கு வந்தடைவதற்காகக் காத்துக் கொண்டிருந்தார்கள். தூமத்துல் ஜந்தல் முஸ்லிம்களின் கட்டுப்பாட்டுக்குள் வந்திருக்கவில்லை என்றால், ஈராக்கில் முஸ்லிம் படைகளுக்கு முன் ஆபத்துகள் இருந்திருக்கும்.

அடுத்து, ஹுஸைத் மற்றும் கனாஃபிஸ் போர் பற்றிக் கூறப்படுகிறது. ஹுஸைத் கூஃபாவுக்கும், சிரியாவுக்கும் இடையில் உள்ள ஒரு சிற்றூர் ஆகும். கனாஃபிஸ் என்பது ஈராக்கின் திசையில் அம்பாருக்கு அருகில் அமைந்துள்ள ஓர் இடமாகும். இவ்வாறு எழுதப்பட்டுள்ளது: ஹஸ்ரத் காலித் பின் வலீத் (ரலி) அவர்கள் தூமத்துல் ஜந்தலில் தங்கியிருந்தார்கள். வழக்கப்படி, அரபு அல்லாத மக்கள் ஹஸ்ரத் காலித் (ரலி) அவர்களுக்கும், முஸ்லிம்களுக்கும் எதிராக சதித் திட்டம் தீட்டுவதில் மூழ்கியிருந்தார்கள்.

அக்காஃவுக்காகப் பழிவாங்கும் உணர்ச்சியில் தீவில் இருந்த அரேபியர்கள் அரபு அல்லாதவர்களுடன் உடன்படிக்கை செய்து கொண்டிருந்தனர். எனவே, பாக்தாதிலிருந்து, ஸர்ம்ஹரும் அவனுடன் ரூஸ்பாவும் அம்பாரை நோக்கிப் புறப்பட்டனர். இருவரும் ஹுஸைத் மற்றும் கனாஃபிஸிலில் சந்திப்பதாக வாக்குறுதி அளித்தனர்.

ஹீராவில் ஹஸ்ரத் காலித் (ரலி) அவர்களின் பிரதிநிதி ஹஸ்ரத் கஃகஃஆ பின் அம்ர் (ரலி) அவர்கள் இந்த செய்தியைக் கேள்விப்பட்டதும் அன்னார் ஆபித் பின் ஃபத்கீக்கு ஹுஸைதுக்குச் செல்லுமாறு கட்டளையிட்டார்கள். உர்வா பின் ஜாத் அவர்களை கனாஃபிஸுக்கு அனுப்பி வைத்தார்கள். ஹஸ்ரத் காலித் பின் வலீத் (ரலி) அவர்கள் தூமாவிலிருந்து ஹீராவுக்கு திரும்பி வந்தார்கள். அப்போது, அவர்களுக்கும் இதைப் பற்றி தகவல் கிடைத்தது. ஹஸ்ரத் காலித் (ரலி) அவர்களுக்கு மதாயின் மீது தாக்குதல் தொடுப்பதற்கான எண்ணம் இருந்தது.

ஆனால், அங்கு வந்தடைந்து அந்த சம்பவங்கள் பற்றி அறிந்து கொண்டபோது, அன்னார் ஹஸ்ரத் கஃகஃஆ பின் அம்ர் (ரலி) மற்றும் அபூ லைலா ஆகிய இருவரையும் ரூஸ்பா மற்றும் ஸர்மஹரை எதிர் கொள்வதற்காக அனுப்பிவிட்டார்கள். ஹஸ்ரத் காலித் பின் வலீத் (ரலி) அவர்களிடம் இம்ரவுல் கைஸ் கல்பீ அவர்களின் கடிதம் வந்தது.

அன்னார், குஸாஆ மற்றும் கல்ப் கோத்திரத்திற்கு ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்களால் நியமிக்கப்பட்டிருந்த அதிகாரியாக இருந்தார்கள். ஹஸ்ரத் அபூபக்ர் (ரலி) அவர்களின் கிலாஃபத் காலத்தில் அன்னார் இஸ்லாத்தில் உறுதியாக நிலை நின்றார்கள். அன்னாரின் கடிதம் வந்தது. அதில், ஹுஸைல் பின் இம்ரான் முஸன்னாவிலும், ரபீஆ பின் புஜைர் சன்னீயிலும், பிஷ்ரிலும் படையை ஒன்று திரட்டியிருக்கிறார்கள். அவர்கள் அக்காஃவுக்காகப் பழிவாங்கும் உணர்ச்சியில் ரூஸ்பா மற்றும் ஸர்ம்ஹரை நோக்கிச் செல்கிறார்கள் என்றும் அதில் எழுதப்பட்டிருந்தது.

இது தெரிய வந்ததும், ஹஸ்ரத் காலித் பின் வலீத் (ரலி) அவர்கள் ஹீராவில் ஹஸ்ரத் அய்யாஸ் பின் கனம் (ரலி) அவர்களைத் தமது பிரதிநிதியாக நியமித்தார்கள். தாம் அங்கிருந்து புறப்பட்டார்கள். அன்னார், எந்த வழியாக ஹஸ்ரத் கஃகஃஆ (ரலி) அவர்களும், அபூ லைலா அவர்களும் சென்றார்களோ அந்த வழியையே மேற்கொண்டார்கள்.

அன்னார் அய்னுத் தம்ரில் அவர்கள் இருவரோடும் சென்று இணைந்தார்கள். அங்கு சென்று அன்னார் ஹஸ்ரத் கஃகஃஆ (ரலி) அவர்களை படையின் தலைவராக நியமித்தார்கள். அன்னாரை ஹுஸைதுக்கு அனுப்பி வைத்தார்கள். ஆபூலைலாவை கனாஃபிஸுக்கு அனுப்பி வைத்தார்கள். அவர்கள் இருவருக்கும் எதிரிகளையும் அவர்களைத் தூண்டிவிடுபவர்களையும் சுற்றி வளைத்து ஓரிடத்தில் ஒன்றுதிரட்டுங்கள்: அவர்கள் ஒன்று திரளவில்லை என்றால், அதே நிலையில் அவர்கள் மீது தாக்குதல் தொடுத்துவிடுங்கள் என்று கட்டளையிட்டார்கள்.

ஹஸ்ரத் கஃகஃஆ (ரலி) அவர்கள் ஸர்ம்ஹரும், ரூஸ்பாவும் எந்த நடவடிக்கையும் மேற்கொள்ளவில்லை என்பதைக் கண்டபோது, அன்னார் ஹுஸைதை நோக்கி முன்னேறினார்கள். அந்த இடத்தின் பக்கம் அரபு மற்றும் அரபு அல்லாத படைகளின் தலைவன் ரூஸ்பா இருந்தான். அவன் கஃகஃஆ அவர்கள் தம்மை நோக்கி வருகிறார்கள் என்பதைப் பார்த்தபோது, அவன் ஸர்ம்ஹரிடம் உதவி கோரினான். ஸர்ம்ஹர் தனது படைக்குப் பிரதிநிதியை நியமித்தான். பிறகு, தானே ரூஸ்பாவுக்கு உதவச் சென்றான். ஹுஸைதில் இருதரப்பினரும் மோதினர். மிகவும் கடுமையான போர் நடைபெற்றது. அல்லாஹ் அரபு அல்லாதவர்களில் பலரைக் கொல்லச் செய்தான். கஃகஃஆ அவர்கள் ஸர்ம்ஹரைக் கொன்றார்கள். ரூஸ்பாவும் கொல்லப்பட்டான். அந்தப் போரில் பெரும் போர்ச் செல்வம் முஸ்லிம்களுக்கு கிடைத்தது.

ஹுஸைதில் தப்பியோடிய மக்கள் கனாஃபிஸில் ஒன்று திரண்டனர். கனாஃபிஸ் போர் பற்றி எழுதப்பட்டுள்ளது: அபூலைலா தமது படையையும் அவர்களிடம் இருந்த உதவிப் படையையும் அழைத்துக் கொண்டு கனாஃபிஸுக்குப் புறப்பட்டார்கள்.

ஹுஸைதில் தோற்றுப் போன படை ஸர்ம்ஹரின் பிரதிநிதியைச் சென்றடைந்தது. அவனுக்கு முஸ்லிம்களின் வருகைப் பற்றி தகவல் கிடைத்ததும் அவன் கனாஃபிஸை விட்டுவிட்டு எல்லாருடனும் முஸய்யக்குத் தப்பி ஓடிவிட்டான். அந்த இடத்தின் அதிகாரியாக ஹுஸைல் இருந்தான். கனாஃபிஸ் வெற்றிக்குப் பிறகு, அபூலைலா அவர்களுக்கு எந்தக் கஷ்டமும் ஏற்படவில்லை. அந்த அனைத்து வெற்றிகளைக் குறித்த தகவலும் ஹஸ்ரத் காலித் பின் வலீத் (ரலி) அவர்களுக்கு அனுப்பி வைக்கப்பட்டது.

முஸய்யக் போர். ஹஸ்ரத் காலித் பின் வலீத் (ரலி) அவர்களுக்கு ஹுஸைத் வாசிகளும், கனாஃபிஸ் வாசிகளும் தப்பி ஓடிய தகவல் கிடைத்தது. அப்போது, அன்னார் ஹஸ்ரத் கஃகஃஆ, அபூலைலா அஃவத் மற்றும் உர்வா ஆகியோருக்கு கடிதம் எழுதினார்கள். அதில் அன்னார், அவர்களுக்கு ஓர் இரவு நேரத்தை நிர்ணயித்து முஸய்யக்கில் சந்திப்பதற்கான உறுதி அளித்தார்கள். முஸய்யக் கூரான் மற்றும் கல்துக்கு இடையில் அமைந்துள்ளது. கூரானும் தமாஸ்கஸுக்கு அருகில் இருக்கும் ஒரு விசாலமான பகுதியாகும்.

அங்கு எண்ணற்ற சிற்றூர்களும் வயல்களும் உள்ளன. ஹஸ்ரத் காலித் பின் வலீத் (ரலி) அவர்கள் அய்னுத் தம்ரிலிருந்து முஸய்யக்குப் புறப்பட்டார்கள். நிர்ணயிக்கப்பட்ட இரவில் முடிவு செய்யப்பட்ட நேரத்திற்கு ஏற்ப ஹஸ்ரத் காலித் பின் வலீத் (ரலி) அவர்களும், அன்னாரின் அதிகாரிகளும், முஸய்யக் மீது திடீர் தாக்குதல் நடத்திவிட்டார்கள். ஹுஸைல் மீதும் அவனுடைய படை மீதும் அடைக்கலம் புகுந்திருந்த அனைவர் மீதும் மூன்று பக்கங்களிலிருந்தும் தாக்குதல் நடத்திவிட்டார்கள். ஹுஸைல் சில பேருடன் உயிரைக் காப்பாற்றிக் கொண்டு தப்பி ஓடிவிட்டான்.

இரண்டு முஸ்லிம்கள் இஸ்லாமிய படைகளால் கொல்லப்பட்டார்கள். அவர்கள்

முஸய்யக்கில் தங்கியிருந்தார்கள். அவர்களிடம் ஹஸ்ரத் அபூபக்ர் சித்தீக் (ரலி) அவர்களால் வழங்கப்பட்டிருந்த பாதுகாப்புக்கான பத்திரமும் இருந்தது. ஹஸ்ரத் அபூபக்ர் சித்தீக் (ரலி) அவர்களுக்கு அந்த மக்கள் கொல்லப்பட்ட செய்தி கிடைத்ததும், அன்னார் அவர்களுக்கான ஈட்டுத் தொகையையும் செலுத்திவிட்டார்கள். ஹஸ்ரத் காலித் பின் வலீத் (ரலி) அவர்களுக்கு அவர்களின் இந்த செயலுக்கான தண்டனை கிடைக்க வேண்டும் என்று ஹஸ்ரத் உமர் (ரலி) அவர்கள் மிகவும் வலியுறுத்திக் கூறினார்கள். அவர் முஸ்லிம்களை ஏன் கொன்றார்? என்று ஹஸ்ரத் உமர் (ரலி) அவர்கள் மிகவும் உத்வேகம் கொண்டிருந்தார்கள். ஆனால், ஹஸ்ரத் அபூபக்ர் (ரலி) அவர்கள் கூறினார்கள்:

எந்த முஸ்லிம்கள் எதிரிகளின் மண்ணில் எதிரிகளோடு வசிப்பார்களோ, அவர்களுக்கு இப்படிபட்ட சூழ்நிலை ஏற்படுவது ஒன்றும் பெரிய விஷயம் அல்ல. இவ்வாறு நடக்கத்தான் செய்யும். இருப்பினும், ஹஸ்ரத் அபூபக்ர் (ரலி) அவர்கள் அந்த மக்களின் பிள்ளைகளை வளர்த்தல் மற்றும் அவர்கள் மீது அக்கறை கொள்வது பற்றி வலியுறுத்திக் கூறவும் செய்தார்கள்.

சன்னீ மற்றும் ஸுமைல் சம்பவம். ஸுமைல் ஓர் இடமாகும். அதன் பெயர் பிஷ்ர் என்றும் வந்துள்ளது. இது சன்னீ எனும் இடத்தோடு சேர்ந்ததாகும். அய்னுத் தம்ர் போரில் கொல்லப்பட்ட அக்காஃ என்பவனுக்காகப் பழிவாங்குவதற்கான உத்வேகத்தில் ரபீஆ பின் புஜைர் தனது படையை அழைத்துக் கொண்டு சன்னீ மற்றும் பிஷ்ரில் இறங்கினான். ஹஸ்ரத் காலித் (ரலி) அவர்கள் முஸய்யக் போரை முடித்துக் கொண்டு ஹஸ்ரத் கஃகஃஆ மற்றும் அபூலைலாவைத் தமக்கு முன்னால் அனுப்பி வைத்தார்கள். ஓர் இரவை நிர்ணயித்து நாம் அனைவரும் முஸய்யக்கில் செய்தது போன்று இங்கும் மூன்று பல்வேறு திசைகளிலிருந்து எதிரிகள் மீது தாக்குதல் நடத்துவோம் என்று தீர்மானித்தார்கள்.

இதற்குப் பிறகு, ஹஸ்ரத் காலித் (ரலி) அவர்கள் முஸய்யக்கில் இருந்து புறப்பட்டு பல்வேறு பகுதிகளைக் கடந்து ஸுமைலை சென்றடைந்தார்கள். ஹஸ்ரத் காலித் (ரலி) அவர்கள், சன்னீ எனும் இடத்திலிருந்து போரைத் துவக்கினார்கள். அங்கு அன்னாரின் இரண்டு தோழர்களும் அன்னாருடன் வந்து இணைந்து கொண்டார்கள். அவர்கள் மூவரும் இரவு நேரத்தில் மூன்று திசைகளிலிருந்தும் ரபீஆவின் படை மீதும், மிகவும் கம்பீரத்துடன் போர் புரிய ஒன்று திரண்டிருந்த அந்த மக்கள் மீதும் இரவில் போர் தொடுத்தார்கள்.

மேலும், வாள்களை ஏந்தி, எவரும் தப்பி ஓடி எங்கும் தகவல் கூட கொடுக்க முடியாத அளவிற்கு அவர்களை அடியோடு ஒழித்துவிட்டார்கள். அவர்களின் பெண்கள் கைது செய்யப்பட்டனர். பைத்துல் மாலுக்கான போர்ச் செல்வங்களில் ஐந்தில் ஒரு பங்கு ஹஸ்ரத் அபூபக்ர் (ரலி) அவர்களுக்கு அனுப்பி வைக்கப்பட்டது. எஞ்சிய போர்ச் செல்வங்கள் முஸ்லிம் படையினரிடையே விநியோகிக்கப்பட்டது. ஹுஸைல் முஸய்யக் போரிலும் தோற்றுப்போய் உயிரைக் காப்பாற்றிக் கொண்டிருந்தான். அவன் தனது வாக்குறுதிக்கு ஏற்ப ரபீஆ பின் புஜைர் அவர்களின் படையில் இணைந்து கொண்டான்.

இப்பொழுது அவன் மீண்டும் ஓடிச் சென்று ஸுமைல் பின் அத்தாபிடம் அடைக்கலம் புகுந்தான். அத்தாப் ஒரு மாபெரும் படையுடன் பிஷ்ரில் தங்கியிருந்தான். ரபீஆ முழுந்துபோன செய்தி அவன் வரை எட்டும் முன்னர் ஹஸ்ரத் காலித் (ரலி) அவர்கள் அவன் மீதும் மூன்று திசைகளிலிருந்து தாக்குதல் தொடுத்துவிட்டார்கள். இந்தப் போரிலும் பெரும்பாலான மக்கள் கொல்லப்பட்டனர். எண்ணற்ற போர்ச் செல்வங்கள் முஸ்லிம்களுக்குக் கிடைத்தன.

ஹஸ்ரத் காலித் (ரலி) அவர்கள் போர்ச் செல்வங்களை முஸ்லிம்கள் மத்தியில் விநியோகித்துவிட்டார்கள். போர்ச் செல்வங்களில் ஐந்தில் ஒரு பங்கை ஹஸ்ரத் அபூபக்ர் (ரலி) அவர்களுக்கு அனுப்பி வைத்துவிட்டார்கள். ஹஸ்ரத் காலித் (ரலி) அவர்கள் பிஷ்ருக்கு அருகில் இருந்த ரூஸாப் எனும் இடத்தின் பக்கம் திரும்பினார்கள். அந்தப் பகுதியின் தலைவனாக ஹிலால் பின் அக்கா இருந்தான். ஹஸ்ரத் காலித் (ரலி) அவர்களின் வருகையை பற்றி அவனது படைக்கு தெரிய வந்தபோது, படை அவனைவிட்டு விலகிவிட்டது. வேறு வழியில்லாமல் ஹிலால் அங்கிருந்து தப்பியோடினான். முஸ்லிம்கள் எவ்வித சிரமும் இன்றி ரூஸாப்பைக் கைப்பற்றி விட்டார்கள்.

பிறகு, ஃபிராஸ் போர் பற்றி வருகிறது. ஃபிராஸ் என்பது பஸராவுக்கும் யமாமாவுக்கும் இடையில் உள்ள ஓரிடத்தின் பெயர் ஆகும். இங்கு சிரியா, ஈராக் மற்றும் தீவுகளின் வழிகள் வந்து இணைகின்றன. இந்தப் போர் முஸ்லிம்களுக்கும் ரோமானியர்களுக்கும் இடையே துல் கஃஅதா மாதம் ஹிஜ்ரி 12ஆம் ஆண்டு ஃபிராஸ் எனும் இடத்தில் நடந்தது. இந்தப் பொருத்தத்தினாலேயே இந்தப் போர் ஃபிராஸ் போர் என்று பிரசித்திப் பெற்றது.

ஹஸ்ரத் காலித் பின் வலீத் (ரலி) அவர்கள் ரூஸாபைக் கைப்பற்றிவிட்டு ஃபிராஸ் எனும் இடத்தை அடைந்தார்கள். இந்தப் பயணத்தில் ஹஸ்ரத் காலித் (ரலி) அவர்களுக்கு பலப் போர்களை எதிர்கொள்ள நேரிட்டது. மேலும் அன்னாரால், ரமலான் மாதத்தின் நோன்பைக் கூட வைக்க முடியவில்லை. ஹஸ்ரத் காலித் (ரலி) அவர்களின் இந்தத் திடீர் தாக்குதல்கள் மற்றும் கோத்திரங்கள் அன்னாருக்கு எதிரில் இயலாமற்போன செய்திகள் ஈராக் முழுவதும் பரவியிருந்தன.

பாலைவனத்தில் வசித்து வந்த அனைத்துக் கோத்திரங்களும் அச்சமடைந்திருந்தன. அவர்கள் முஸ்லிம்களுக்கு முன்னால் ஆயுதங்களைக் கீழே போட்டுவிட்டு அவர்களுக்குக் கட்டுப்படுவதிலேயே தமது நலன் இருப்பதாகப் புரிந்து கொண்டார்கள். ஹஸ்ரத் காலித் பின் வலீத் (ரலி) அவர்கள் தமது படையுடன் யூப்ரட்டீஸ் நதிக் கரையோரமாக வடக்குப் பகுதிகளின் பக்கம் முன்னேறிச் செல்ல ஆரம்பித்துவிட்டார்கள். அன்னார் எங்கு சென்றடைந்தாலும் அங்குள்ள மக்கள் அன்னாருடன் சமாதானம் செய்து கொண்டார்கள். அன்னாருக்கு கட்டுப்படுவதற்கு ஒப்புக் கொண்டனர்.

இறுதியில், அன்னார் ஃபிராஸ் சென்றடைந்தார்கள். அங்கு சிரியா, ஈராக் மற்றும் அல்ஜீரியாவின் எல்லைகள் இணைகின்றன. ஃபிராஸ் ஈராக்கிற்கும், சிரியாவிற்கும் வடக்கு எல்லையில் உள்ளது. அய்யாஸ் பின் கனமுக்கு நற்பேறு கிடைத்து அன்னார் ஆரம்பத்திலேயே தூமத்துல் ஐந்தலை வெற்றி கொண்டிருந்தார்கள் என்றால், அநேகமாக ஹஸ்ரத் காலித் (ரலி) அவர்கள் அங்கு வரை சென்றடைந்திருக்க மாட்டார்கள்.

ஏனெனில், ஈராக் மற்றும் சிரியா முழுவதையும் வெற்றிக் கொள்வது ஹஸ்ரத் அபூபக்ர் (ரலி) அவர்களின் எண்ணமாக இருக்கவில்லை. அன்னார் அரபு நாட்டோடு இணையும் அந்த இரு நாடுகளின் எல்லைகளில் அமைதி மற்றும் சமாதானம் நிலைபெற்று விடவேண்டும். அந்தப் பகுதிகள் மூலமாக ஈரானியர்களும், ரோமானியர்களும் அரேபியர்கள் மீது தாக்குதல் தொடுக்க முடியாமல் இருக்கட்டும் என்று மட்டுமே விரும்பினார்கள்.

ஆனால், இவ்வீர் அரசாங்கங்களும் முழுமையாக முஸ்லிம்களின் கட்டுப்பாட்டுக்குள் வந்துவிட வேண்டும் என்பதே அல்லாஹ்வின் நாட்டமாக இருந்தது. எனவே, அவன் எத்தகைய வழிவகைகளை ஏற்படுத்திவிட்டான் என்றால், ஹஸ்ரத் காலித் (ரலி) அவர்கள் ஈராக்கிய கோத்திரங்களைக் கட்டுப்பட வைக்கும் நோக்கத்தில் வடக்கின் கடைசி வரை சென்றுவிட்டார்கள்.

இவ்வாறு முஸ்லிம்களுக்கு மேற்புறமிருந்து சிரியா மீது தாக்குதல் தொடுப்பதற்கான வழி திறந்து விட்டது. ஈரானிய எல்லைகளிலிருந்து ரோமானியர்கள் மீது தாக்குதல் தொடுப்பதற்கான வழி திறந்து விடுவது எப்படிப்பட்ட ஓர் அற்புதமாக இருந்தது என்றால், அதைப் பற்றிய சிந்தனை ஹஸ்ரத் அபூபக்ர் (ரலி) அவர்களுக்கும் கூட வரவில்லை.

மேலும், இந்தப் பணி எப்படிப்பட்ட ஒரு நபரின் கைகளால் வெளிப்பட்டது என்றால், ஹஸ்ரத் அபூபக்ர் (ரலி) அவர்கள் கூறியதுபோன்று உண்மையிலேயே அரபு மற்றும் அரபு அல்லாத பெண்களால் அந்த நபருக்கு நிகரான ஒருவரைப் பெற்றெடுப்பது முடியாமல் போனது.

ஃபிராஸில் ஹஸ்ரத் காலித் (ரலி) அவர்கள் முழுமையாக ஒரு மாதம் வரை தங்க வேண்டி வந்தது. அங்கும் அன்னார் எத்தகைய துணிச்சல், உறுதிப்பாடு மற்றும் நிலைத்திருத்தலை வெளிப்படுத்தினார்கள் என்றால் அன்னாருக்கு நிகர் அன்னாரேதான். அன்னார் நாலாப்புறத்திலிருந்தும் எதிரிகளால் சூழப்பட்டிருந்தார்கள். கிழக்கு பக்கம்

ஈரானியர்கள் இருந்தனர். அவர்கள் அன்னாரின் இரத்தத்துக்காகத் தாகித்துக் கொண்டிருந்தனர். மேற்குத் திசையில் ரோமானியர்கள் இருந்தனர். தற்போது, ஹஸ்ரத் காலித் (ரலி) அவர்களின் கூட்டத்தினரை அழித்து நாசமாக்கவில்லை என்றால், பிறகு தடுத்தாலும் இந்த வெள்ளம் நிற்காது என்பதை அவர்கள் அறிந்திருந்தார்கள்.

ரோமானியர்களுக்கும், முஸ்லிம்களுக்கும் இடையில் யூப்ரட்டீஸ் நதி மட்டுமே தடையாக இருந்தது. அதுமட்டுமின்றி, நாலாப்புறமும் காட்டரபிகளின் கோத்திரங்கள் வசித்து வந்தன. அவர்களுடைய பெரும் பெரும் தலைவர்களைக் கொலை செய்து அவர்களுடைய உள்ளத்தில் பழி வாங்க வேண்டும் என்ற ஓர் அணையாத நெருப்பை ஹஸ்ரத் காலித் (ரலி) அவர்கள் தூண்டிவிட்டிருந்தார்கள். இந்த இக்கட்டான சூழ்நிலையைக் குறித்து காலித் (ரலி) அவர்கள் அறியாமல் இருக்கவில்லை. அன்னார் விரும்பி இருந்தால் ஹீராவுக்குத் திரும்பி வந்து தம்முடைய ஆற்றலையும், சக்தியையும் அதிகப்படுத்திக் கொண்டு, பின்னர் ரோமானியர்களுக்கு எதிராக போரிடுவதற்காகக் கிளம்பிச் சென்றிருக்கலாம்.

ஆனால், அன்னார் அவ்வாறு செய்யவில்லை. ஏனெனில், எதிரிகளை முன்னால் காணும்போது, ஹஸ்ரத் காலித் (ரலி) பொறுமையை மேற்கொள்வது சாத்தியம் இல்லாததாக ஆகிவிடுகின்றது. அன்னாருடைய இயல்பு அவ்வாறானதாக இருந்தது. அன்னாருடைய பார்வையில் ஈரானியர்களாக இருந்தாலும் சரி! காட்டரபிகளாக இருந்தாலும் சரி! அனைவரும் கைப்பற்றத் தகுந்தவர்களாகவே இருந்தார்கள்.

அவர்களின் மாபெரும் படைகளை காலித் (ரலி) அவர்கள் அதற்கும் முன்பும் பொருட்படுத்தியது கிடையாது: அதற்குப் பிறகும் பொருட்படுத்துவதற்கு ஆயத்தமாக இருக்கவில்லை. ஆகவே, அன்னார் மிகவும் மனநிறைவுடன் போருக்கான ஆயத்தங்களில் மூழ்கிக் கொண்டிருந்தார்கள். இங்கோ ரோமானியர்கள் அதற்கு முன்பு காலித் (ரலி) அவர்களை எதிர்கொண்டிருக்கவில்லை.

(ஆகவே) ஹஸ்ரத் காலித் (ரலி) அவர்களின் தாக்குதலின் கடுமையைப் பற்றி அவர்கள் அறியாதவர்களாக இருந்தனர். இஸ்லாமியப் படைகள் ஃபிராஸ் எனுமிடத்தில் ஒன்று கூடி, முழுவதுமாக ஒரு மாதம் வரை அவர்களுக்கு முன்னால் முகாமிட்டிருந்தன. ஆகவே, ரோமானியர்களுக்குப் பெரும் உத்வேகம் வந்து தமக்கு அருகில் இருக்கக் கூடிய ஈரானிய படை முகாம்களில் உதவி கோரினர்.

ஈரானியர்கள் பெரும் மகிழ்ச்சியுடன் ரோமானியர்களுக்கு உதவி செய்தனர். ஏனெனில், முஸ்லிம்கள் அவர்களை இழிவடையச் செய்திருந்தனர். அவர்களின் மகத்துவத்தையும் கண்ணியத்தையும் தலை கீழாக புரட்டிப் போட்டு அவர்களின் ஆணவத்தை மண்ணோடு மண்ணாக்கி இருந்தனர். ஈரானியர்கள் மட்டுமின்றி தஃக்லிப், இஆத் மற்றும் நமிர் ஆகிய அரபு வம்சாவளி கோத்திரங்களும், ரோமானியர்களுக்கு முழுமையாக உதவி செய்தன. ஏனென்றால், அவர்கள் தமது தலைவர்கள் மற்றும் முக்கியஸ்தர்களின் கொலைகளை மறந்திருக்கவில்லை.

ஆகவே, ரோமானியர்கள் ஈரானியர்கள் மற்றும் அரபு வம்சாவளி கோத்திரங்களின் ஒரு மாபெரும் படை முஸ்லிம்களோடு போரிடுவதற்காகப் புறப்பட்டது. யூப்ரடீஸ் நதியை அடைந்ததும் அவர்கள் முஸ்லிம்களிடம் நீங்கள் நதியை கடந்து எங்கள் பக்கம் வருகிறீர்களா? அல்லது நாங்கள் நதியைக் கடந்து உங்கள் பக்கம் வரவா? என்று கேட்டு அனுப்பினர். ஹஸ்ரத் காலித் (ரலி) அவர்கள், நீங்கள்தான் சண்டையிட வந்துள்ளீர்கள் நீங்களே எங்கள் பக்கம் இங்கு வாருங்கள் என்று பதில் கூறினார்கள். ஆகவே, எதிரிகளுடைய படை நதியை கடந்து மறுபுறம் இறங்க ஆரம்பித்தது.

அந்த இடைப்பட்ட நேரத்தில் ஹஸ்ரத் காலித் பின் வலீத் (ரலி) அவர்கள் தம்முடைய படையை நன்கு முறையாக வரிசையமைத்து எதிரிகளுடன் போரிட முழுமையாக அவர்களை ஆயத்தம் செய்துவிட்டார்கள். போர் துவங்குவதற்கான நேரம் வந்தபோது ரோமானிய படையினுடைய தளபதி தன்னுடைய படையைப் பார்த்து, எந்தக் கூட்டம் மிகவும் அருமையாகப் போரிட்டது என்பதை அறிந்து கொள்ளும் வகையில் அனைத்துக் கோத்திரங்களும் தனித்தனியாக ஆகிவிடுங்கள் என்று கூறினான்.

ஆகவே, அனைத்துக் கோத்திரங்களும் தத்தமது தலைவர்களுடன் தனித்தனியாகப் பிரிந்துவிட்டன. போர் துவங்கிய போது ஹஸ்ரத் காலித் பின் வலீத் (ரலி) அவர்கள் தமது படையிடம், எதிரிகளை நாலாப்புறமும் சுற்றி வளைத்து அவர்களை ஓரிடத்தில் ஒன்று சேர்த்து அடுத்தடுத்து தொடர்ச்சியாகத் தாக்குதல் தொடுத்து அவர்கள் சுதாரிப்பதற்கான வாய்ப்பு கிடைக்காமல் இருக்கச் செய்யுங்கள் என்று கட்டளையிட்டார்கள்.

ஆகவே, அவ்வாறே நிகழ்ந்தது. இஸ்லாமிய படைகள் ரோமானியப் படையைச் சுற்றி வளைத்து ஓரிடத்தில் ஒன்று கூடச் செய்தன. கோத்திரங்களைத் தனித்தனியாக முஸ்லிம்களுக்கு எதிராக அனுப்பி வைத்து போரை நீடிக்கச் செய்யலாம்: முஸ்லிம்கள் களைப்படைந்து சுக்கு நூறாக ஆகியவுடன் அவர்கள் மீது முழுமையாகத் தாக்குதல் நடத்தி அவர்களை முழுமையாகத் தோல்வியடையச் செய்யலாம் என்று ரோமானியர்களும் அவர்களின் நட்புக்கோத்திரங்களும் திட்டமிட்டிருந்தன.

ஆனால், அவர்களுடைய இந்த எண்ணம் வீணாகிவிட்டது. அவர்களுடைய திட்டம் அவர்களுக்கு எதிராகவே திரும்பியது. முஸ்லிம்கள் அவர்களை ஓரிடத்தில் ஒன்று சேர்த்து அவர்கள் மீது தாக்குதல் நடத்த ஆரம்பித்தபோது, அவர்களால் அதை சமாளிக்க முடியவில்லை. மிக விரைவில் தோல்வியடைந்து போர்க் களத்தில் இருந்து தப்பி ஓட ஆரம்பித்தனர். ஆனால், முஸ்லிம்களோ அவர்களை எங்கு (தப்பி ஓட) விடப்போகிறார்கள்! முஸ்லிம்கள் அவர்களைப் பின் தொடர்ந்தார்கள்: மிக நீண்ட தொலைவு வரை அவர்களைக் கொன்றுக் கொண்டே சென்றார்கள்.

இந்தப் போரில், போர்க் களத்திலும் அதன் பிறகு பின்னால் விரட்டிச் சென்றும் ஒரு லட்சம் எதிரிகள் கொல்லப்பட்டதாக அனைத்து வரலாற்று ஆசிரியர்களும் ஒன்பட்டு கூறுகின்றனர். வெற்றிக்குப் பிறகு, ஹஸ்ரத் காலித் பின் வலீத் (ரலி) அவர்கள் ஃபிராஸில் 10 நாட்கள் தங்கியிருந்தார்கள். ஹிஜ்ரி 12ஆம் ஆண்டு துல் கஅதா 25ஆம் தேதி தம்முடைய படைக்கு ஹீராவை நோக்கி முன்னேறுமாறு அன்னார் கட்டளையிட்டார்கள். ஓர் எழுத்தாளர் இந்தப் போர் பற்றி கருத்து கூறியவாறு எழுதுகிறார்:

முஸ்லிம்கள் ஹஸ்ரத் அபூபக்ர் (ரலி) அவர்களின் கிலாஃபத் காலகட்டத்தில் முதன் முறையாக ரோம், ஈரான் ஆகிய இரண்டு வல்லரசுகளுக்கு எதிராகவும், அவர்களைப் போன்ற சிந்தனையுடைய அரபு படைகளுக்கு எதிராகவும் போரிட்டார்கள். அவ்வாறு இருந்தும் கூட, முஸ்லிம்களுக்கு மாபெரும் வெற்றி கிடைத்தது. சந்தேகத்திற்கிடமின்றி இந்த போர் வரலாற்று ரீதியிலான போராகவும், முடிவு வழங்கிய போர்களில் ஒன்றாகவும் இருந்தது.

மற்ற பெரும் போர்களுக்கு கிடைத்திருந்த பிரசித்தி இதற்கு கிடைக்கவில்லைதான். ஆயினும் இதன் மூலமாக நிராகரிப்பாளர்களின் அக ஆற்றல் முடிவுக்கு வந்துவிட்டது. அவர்கள் ஈரானுடன் சம்பந்தப்பட்டவர்களாக இருந்தாலும் சரி! அல்லது ரோமுடன் சம்பந்தப்பட்டவர்களாக இருந்தாலும் சரி! அல்லது அரேபியாவுடன் சம்பந்தப்பட்டவர்களாக இருந்தாலும் சரி! அல்லது ஈராக்குடன் சம்பந்தப்பட்டவர்களாக இருந்தாலும் சரி!

அல்லாஹ்வின் வாளாகிய காலித் (ரலி) அவர்கள் ஈராக்கில் கடந்து வந்த போர்களில் இது கடைசியானதாக இருந்தது. இந்தப் போருக்குப் பிறகு, ஈரானியர்களின் மகத்துவமும், அந்தஸ்தும் மண்ணோடு மண்ணாகிவிட்டது. இதற்குப் பிறகு, முஸ்லிம்களை அச்சுறுத்தத்தக்க ஆற்றல் கொண்ட படைபலம் அவர்களுக்கு கிடைக்கவே இல்லை. ஓர் எழுத்தாளர் ஃபிராஸ் போரின் முக்கியத்துவத்தைப் பற்றி இவ்வாறு எடுத்துரைக்கிறார்:

உல்லைஸில் முஸ்லிம்களின் வெற்றிக்குப் பிறகு ஈரானிய படையின் முதுகெலும்பு உடைந்துவிட்டது. ஹஸ்ரத் காலித் பின் வலீது (ரலி) அவர்கள் முன்னேறிச் செல்வதைத் தொடர்ந்து கொண்டிருந்தார்கள். அவர்கள் வரிசையாக, அம்கீஷா, ஹீரா, அம்பார், அய்னுத் தம்ர், தூமத்துல் ஜந்தல், ஆகியவற்றை வெற்றிக் கொண்டார்கள். இறுதியாக, ஃபிராஸ் எனும் இடம் வரை சென்றடைந்துவிட்டார்கள். ஃபிராஸ் என்பது யூப்ரட்டீஸ் நதிக்கரையோரத்தில் இருக்கக்கூடிய ஒரு நகரமாகும். அது ரோமானியப் பேரரசின் எல்லைக்கு மிக அருகில் இருந்தது. அங்கு ரோமானிய, ஈரானிய, கிறித்தவ கோத்திரங்களின் ஒருமித்த படை

முஸ்லிம்களுக்கு எதிராக இருந்தது.

ஆனால், ஹஸ்ரத் காலித் பின் வலீத் (ரலி) அவர்கள் நிராகரிப்பாளர்களின் இந்தப் பெரும் படையையும் தோல்வியுறச் செய்தார்கள். அரேபிய வெற்றியாளர் ஸய்யிதுனா ஹஸ்ரத் காலித் பின் வலீத் (ரலி) அவர்கள் ஈராக்கை ஒரு வருடம் மற்றும் இரண்டு மாதத்தில் வெற்றிக் கொண்டுவிட்டார்கள். அன்னாருடன் மொத்தம் 10ஆயிரம் படைவீரர்கள் இருந்தனர். ஏறக்குறைய இதே அளவு படைதான் மற்ற இஸ்லாமிய படைத் தளபதிகளுடன் இருந்தன. இத்தனை சிறிய படை, இருந்த காலக்கெடுவுக்குள் செய்த மாபெரும் பணி இஸ்லாமிய வரலாற்றில் நிகரற்ற ஒன்றாக இருந்தது.

ஹஸ்ரத் காலித் பின் வலீத் (ரலி) அவர்கள் எல்லாப் போர்களிலும் கலந்து கொண்டார்கள். எந்த சந்தர்ப்பத்திலும், தோல்வியின் முகத்தை அவர்கள் காணவில்லை. ஹஸ்ரத் முஹம்மது நபி (ஸல்) அவர்களின் சார்பாக அன்னாருக்கு ஸைஃபுல்லாஹ் அல்லாஹ்வின் வாள் எனும் பட்டம் கிடைத்திருந்தது. அன்னார் வெற்றி பெற்ற பகுதிகளில் எந்த அளவு சிறந்த நிர்வாகத்தை ஏற்படுத்தினார்கள் என்றால், (அங்குள்ள) மக்கள் ஈரானிய ஆட்சியை விட அரேபிய ஆட்சியையே விரும்ப ஆரம்பித்தார்கள்.

எவ்வாறு இருப்பினும், அரேபியாவின் இறுதி வெற்றியாக ஃபிராஸில் உடைய வெற்றி இருந்தது. ஹஸ்ரத் காலித் (ரலி) அவர்கள் 10 நாட்கள் வரை ஃபிராஸில் தங்கி இருந்தார்கள். பிறகு, பாதி படையை அழைத்துக் கொண்டு சிரியாவை எதிர்கொள்ள புறப்பட்டுவிட்டார்கள்.

ஈராக் வெற்றியின் மீது ஒரு பார்வையை செலுத்துவோம். இதைக் குறித்து இவ்வாறு எழுதப்பட்டுள்ளது: ஈராக்கை நோக்கி படையெடுத்துச் சென்றது மிகப் பெரிய வெற்றியின் அடையாளமாக இருந்தது. அங்கு பாரசீக படையை அது எண்ணிக்கை மற்றும் ஆயுத பலத்தில் முஸ்லிம்களை விட எவ்வளவோ வலிமை மிக்கதாக இருந்தது: இருப்பினும் வரிசையாக நாசமிகு தோல்வியைக் காணச் செய்தனர். பாரசீகப் படை தமது காலத்தில் அனைவரையும் விட நாசத்தை ஏற்படுத்தக் கூடிய படையாக இருந்ததை நினைவிற் கொள்ள வேண்டும்.

ஹஸ்ரத் அபூபக்ர் சித்தீக் (ரலி) அவர்களின் காலத்தின் இம்மாபெரும் பணிக்கு நிகரான ஒன்றை வரலாற்றால் எடுத்து வைக்க இயலாது. போர்க் களத்தில் கிடைத்த அனைத்து வெற்றிகளும் ஹஸ்ரத் காலித் பின் வலீத் (ரலி) அவர்கள் மற்றும் அன்னாருடைய தோழர்களான படைத் தளபதிகளின் முயற்சி என்பதில் எந்த சந்தேகமும் கிடையாது.

ஒரு படைத் தளபதி எவ்வளவுதான் திறமை வாய்ந்தவராக இருந்தாலும், நாட்டின் அதிபரின் தனிப்பட்ட சிறப்புகளும் உயர்ந்த நடத்தைகளும் அவர் மீது தாக்கத்தை ஏற்படுத்தாத வரை இவ்வாறு அந்தப் படைத் தளபதியால் முழு நம்பிக்கையுடனும், சமநிலையுடனும், நன்றியுணர்வுடனும், கலப்பற்ற தன்மையுடனும், பணியாற்ற இயலாது என்பதற்கு வரலாறு சான்று பகர்கின்றது.

நிராகரிப்பாளர்கள், முர்தத்கள் மற்றும் கிளர்ச்சியாளர்கள் ஆகியோருக்கெதிரான போர்களில் துவங்கி ஈராக்குடைய வெற்றி வரை அனைத்து படித்தரங்களின் போதும் தனிப்பட்ட முன்மாதிரி, அழகிய நிர்வாகம், உறுதிப்பாடு ஆகியவற்றை ஹஸ்ரத் அபூபக்ர் (ரலி) அவர்கள் எந்த அளவு நிலைநாட்டினார்கள் என்றால், அது இஸ்லாமிய சமுதாயத்தினரின் உள்ளங்களில் பெரும் பெரும் தியாகங்களைச் செய்வதற்கு அவர்களை எப்பொழுதும் ஆயத்தமாக வைத்திருந்தது.

அன்னாருடைய அனைத்துக் கட்டளைகளும், வழிகாட்டல்களும் களஞ்சியமாகவும் அறிவு ஞானத்தால் நிரம்பியதாகவும் இருந்த அதேநேரத்தில் அன்னாருடைய தனிப்பட்ட செயல்பாடுகள் அதையும் விட உயர்ந்தவையாக மேலோங்கி இருந்தன. ஆரம்பத்திலிருந்து இறுதிவரை எந்த ஒரு சந்தர்ப்பத்திலும் அன்னார் தாம் பிறப்பித்த கட்டளைகளையோ, வரையறைகளையோ தனிப்பட்ட தாக்கத்தின் காரணமாகவோ, பணிந்து மாற்றியது கிடையாது: ஒரு வழிகாட்டி,திடம் மற்றும் உறுதித் தன்மையில் இதைவிட வேறு என்ன சான்று எடுத்து வைக்க முடியும்.

இது மட்டுமின்றி, ஹஸ்ரத் அபூபக்ர் (ரலி) அவர்கள் தம் கீழ் இருந்த திறமை வாய்ந்தவர்களின் செயல்பாடுகளுக்காக எந்த அளவு உயர்ந்த தரத்தை நிலைநாட்டினார்கள் என்றால்,தியாகத்தின் உணர்வுகளை அதிகரிக்கச் செய்வதற்கு எந்த அளவு நல்லெண்ணம், நம்பிக்கை ஆகியவற்றின் முன்மாதிரியை அன்னார் நிலைநாட்டினார்கள் என்றால், அதைப் போன்ற முன்னுதாரணத்தைத் தேடினாலும் காணக் கிடைக்காது. ஹஸ்ரத் அபூபக்ர் (ரலி) அவர்களைப் போன்ற ஒருவர் தமது வழிகாட்டியின் வழிகாட்டல்கள், கூற்றுகள், கட்டளைகள் ஆகியவற்றுக்காக நன்றி உணர்வின் உச்சம் வரைச் சென்று அளவற்ற தியாகங்களை செய்வதில் ஓர் உயிருள்ள முன்மாதிரியாக இருக்கும்போது, அவ்வாறான தலைவருக்கு கீழ் உள்ளவர் அந்தத் தலைவருடைய கட்டளைகளை செயல்படுத்துவதிலும் ஏதேனும் குறை வைப்பாரா என்ன?

ஸய்யிதுனா ஹஸ்ரத் காலித் (ரலி) அவர்களின் போர்த் திறமைகள் அன்னாரை உலகின் மாபெரும் படைத் தளபதிகளின் வரிசையில் சரியாகக் கொண்டு நிறுத்தி விடுகிறது. தம்முடைய எதிராளிகளுக்கெதிராக எந்த அரேபிய நுட்பங்களை ஸய்யிதுனா காலித் (ரலி) அவர்கள் தமதாக்கிக் கொண்டார்களோ, இன்னும் கூறுவதென்றால், ஸய்யிதுனா காலித் (ரலி) அவர்கள் எந்தக் கொள்கைகளை வகுத்து எடுத்தார்களோ அவை போர்க்கள வரலாற்றில் ஒளிமிகுந்த பாடங்களாக உள்ளன. ஸய்யிதுனா காலித் (ரலி) அவர்களின் துணிவுள்ள திட்டங்களை வெற்றி பெறச் செய்வதற்காக முஸ்லிம்களின் போர்த் திறமைகள் மற்றும் அவர்களுடைய படையைத் தொடர்ச்சியாக செயல்பட வைத்தது அதனுடைய மிக முக்கியமான காரணமாக இருந்தது.

இந்த இரு விஷயங்கள் மூலமாக ஸய்யிதுனா காலித் (ரலி) அவர்கள் ஆற்றல், மற்றும் சகிப்புத்தன்மை ஆகியவற்றின் இறுதி எல்லை வரை பயனடைந்தார்கள். இது எவ்வாறு சாத்தியமானது என்றால், அன்னார் ஒரு துன்பத்தை தாம் அனுபவிக்காத வரை தம்முடைய வீரரை அந்தத் துன்பத்தில் ஆழ்த்த மாட்டார்கள்.

முதலாவது கலீஃபா அவர்களுக்கு இஸ்லாமிய வரலாற்றில் ஒரு தனித்துவமான அந்தஸ்து இருப்பதுபோன்று, வெளிப்பிரதேசங்களை வெற்றிக் கொண்டு உலகின் அரசியல் மற்றும் மார்க்க வரைபடத்திற்குப் புதிய தோற்றத்தைக் கொடுத்ததில் ஹஸ்ரத் அபூபக்ர் சித்தீக் (ரலி) அவர்களுக்கு உதவியாளர்களாக இருந்த படைத் தளபதிகளுள் அனைவரையும் விட ஸய்யிதுனா காலித் (ரலி) அவர்கள் முதன்மையானவராக இருந்தார்கள்.

அனைத்து முஸ்லிம்களும் ஹஸ்ரத் அபூபக்ர் (ரலி) அவர்களின் அரசாட்சி மற்றும் ஆன்மீக வழிகாட்டல் ஆகியவற்றின் கீழ், ஸய்யிதுனா காலித் (ரலி) அவர்களின் படை தலைமைத்துவத்தின் மூலமாக ஈராக்கின் ஒரு மூலையிலிருந்து மற்ற மூலை வரை சூறாவளியைப் போன்று பரவிவிட்டார்கள். அவர்கள் இதைப் போன்றே இன்னொரு பேரரசை வெற்றி கொள்ள இருந்தார்கள். அது கிழக்கத்திய ரோம் ஆக இருந்தது.

எவ்வாறு இருப்பினும், ஹஸ்ரத் அபூபக்ர் சித்தீக் (ரலி) அவர்களின் காலத்தில் நடந்த இதன் (எஞ்சிய சம்பவங்களின்) சிறு பகுதியை இன்ஷா அல்லாஹ் இனிவரும் காலத்தில் எடுத்துரைப்பேன். சிறிது நேரம் அதிகமாகும் என்று நான் கூறியிருந்தேன். இந்தப் போரின் தொடர் முடிந்துவிட்டது.

அடுத்த ஜுமுஆ அன்று யூகே ஜமாஅத்தின் ஆண்டு மாநாடும் ஆரம்பிக்கின்றது. இன்ஷாஅல்லாஹ். இந்த மாநாடு எல்லா வகையிலும் அருளுக்குரியதாக ஆகுவதற்காக துஆ செய்யுங்கள்.

கலந்து கொள்ள வரக் கூடியவர்களுக்காகவும், அவர்களின் பயணமும் நல்ல விதமாக அமையவும், அவர்கள் கலந்து கொள்வதற்காகவும் துஆ செய்யுங்கள். டியூட்டி கொடுக்கக் கூடியவர்களுக்காகவும் துஆ செய்யுங்கள். அவர்கள் தமது கடமைகளைச் சரியாக செய்வதற்கான நல்வாய்ப்பை அல்லாஹ் அவர்களுக்கு வழங்குவானாக.

ஏனெனில், இரு வருடங்களுக்குப் பிறகு பெரிய மாநாடு நடக்கிறது: மூன்று வருடங்கள் என்று கூறலாம். கடந்த வருடம் நடைபெற்றது. ஆனால், சிறிய அளவில் நடைபெற்றது. ஆகவே, முழுமையான முறையில் பெரிய மாநாடு இப்பொழுது நடைபெறுகிறது. ஆகவே, சில சிரமங்களும் உருவாகலாம். நிர்வாக ரீதியாக உள்ள சிரமங்களாக இருந்தாலும் சரி! அல்லது வேறு எந்த ஒரு வகையில் சிரமங்கள் உருவானாலும் சரி! அல்லாஹ் அவற்றை நீக்கிவிடுவானாக.

தமிழாக்கம் :

மவ்லவி. அதாவுல் முக்னீ

* * * * *

**EDITOR**
Moulavi.O.M. MUZZAMMIL AHMAD
**SUB EDITOR**
Moulavi. ABDUR RAHMAN TAHIR
Mobile : + 91 96774-14441
+91 88381-58410
E-mail : subeditortamil@gmail.com
Website : www.akhbarbadr.in

REGISTERED WITH THE REGISTRAR OF THE NEWSPAPERS FOR INDIA AT NO PUNTAM/2016/68785
Weekly BADAR Qadian
Distt. Gurdaspur (Pb.) INDIA Qadian - 143516
Postal Reg.No. GDP-39/2020-2022 Vol. 7 Thursday 01 September 2022 Issue No. 35

**MANAGER**
SHAIKH MUJAHID AHMAD
Mobile : +91 99153-79255
E-mail : managerbadrqnd@gmail.com

**ANNUAL SUBSCRIPTION** : Rs.600/- (Per Issue Rs. 11/-) (**WEIGHT** - 20-50 gms/issue)

## (மல்ஃபூஸாத்) முதல் பக்கத் தொடர்ச்சி

நபிமார்களின் மீது உம்மியத் மேலோங்கி இருக்கின்றது. நமது நபி (ஸல்) அவர்களை இதனால் தான் இறைவன் உம்மீ நபியாக அனுப்பினான். அதாவது, அன்னார் (ஸல்) அவர்கள் எந்த ஒரு பள்ளிக்கூடத்திலும் கல்வி கற்கவில்லை. மேலும் எவரையும் ஆசிரியராக ஆக்கிக் கொள்ளவில்லை. அவ்வாறிருந்தபோதிலும், அன்னார் (ஸல்) அவர்கள் உலகக் கல்வியின் நிபுணர்களையும் ஆச்சரியத்தில் உறையச் செய்துவிட்ட ஞானங்களையும், கருத்துகளையும் எடுத்துரைத்தார்கள். திருக்குர்ஆன் போன்ற பரிசுத்தமான, முழுமையான வேதம் அன்னாரின் உதடுகளிலிருந்து வெளிப்பட்டது. அதன் இலக்கணச் செறிவும், சிறப்புகளும் முழு அரேபியாவையும் மௌனத்தில் ஆழ்த்திவிட்டது.

அனைவரையும் விட ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள் ஞானங்களில் உயர்ந்து விளங்குவதற்கு காரணமான அந்த விஷயம் எது? அது தக்வா (இறையச்சம்) மட்டுமே ஆகும். திருக்குர்ஆன் போன்ற வேதத்தை அன்னார் (ஸல்) கொண்டு வந்தார்கள். மேலும் அதன் ஞானங்கள் உலகை ஆச்சரியத்தில் உறையச் செய்துவிட்டன என்பதை விட ஹஸ்ரத் நபி (ஸல்) அவர்களின் பரிசுத்தமான வாழ்க்கைக்கு சான்று வேறு என்னவாக இருக்க முடியும்?

அன்னார் (ஸல்) அவர்கள் உம்மீ (எழுதப்படிக்கத் தெரியாதவர்) ஆக இருந்தது இந்த விஷயத்திற்கு சான்றாகும். அதாவது, திருக்குர்ஆன் ஞானங்களை அல்லது விண்ணின் ஞானங்களை பெறுவதற்கு தேவை இறையச்சமே தவிர, உலக தந்திரங்கள் அல்ல.

(மல்ஃபூஸாத் தொகுதி 1,பக்கம் 386,காதியான் பதிப்பு 2018)

## (தஃப்ஸீரே கபீர்) முதல்பக்கத் தொடர்ச்சி

உலகத்தின் அமைதி சீரழிந்துவிடும். எனவே, دَخَلًا என்ற சொல்லும் இந்த விஷயத்தை வெளிப்படுத்துகின்றது.

كَالَّتِیْ نَقَضَتْ غَزْلَهَا مِنْۢ بَعْدِ قُوَّةٍ என்பதன் பொருளும் அமைதியை நிலைநாட்டிய பிறகு, குழப்பத்தின் நிலையை உருவாக்காதீர்கள் என்பதாகும்.

இந்த நிலையில் இந்த வசனத்தின் பொருள் இவ்வாறு அமையும். அதாவது, ஒரு சமுதாயம் தற்போது பலம் வாய்ந்ததாக உள்ளது. அதனை எதிர்கொள்ள முடியாது. எனவே உடன்படிக்கை செய்து கொண்ட பிறகு, உங்களிடமிருந்து அவர்கள் கவனமற்றவர்களாக ஆகிவிடும்போது, நீங்கள் உள்ளுக்குள்ளேயே தயாரிப்புகளை செய்து கொண்டு அவர்கள் மீது தாக்குதல் நடத்தி அவர்களை நாம் அழித்துவிடலாம் என்ற எண்ணத்துடன் ஒரு சமுதாயத்துடன் சமாதானம் செய்து கொள்வது ஆகுமானதல்ல.

அரசியல் உலகம் இதுபோன்ற செயல்களை எப்போதும் செய்து வருகின்றது. இஸ்லாத்தின் அடிப்படை அத்ல் (நீதி), இஹ்ஸான் (நன்மை), ஈய்தாயிதில் குர்பா (உறவினர்களுக்கு கொடுப்பது போன்று கொடுப்பது) ஆகிய விஷயங்களை உள்ளடக்கியுள்ளது. இஸ்லாத்தின் எதிரிகளுடன் தவறாக நடந்து கொள்ளப்பட்டாலும் சரியே! அதனை இஸ்லாம் விரும்பவில்லை. மேலும் அவ்வாறு செய்வதிலிருந்து இஸ்லாம் தடுத்துள்ளது.

(2) இதன் இரண்டாவது பொருள் இவ்வாறாகும். அதாவது, இன்றைய நாட்களில் ஐரோப்பிய சமுதாயங்கள் செய்வது போன்று, ஒரு பலவீனமான சமுதாயத்துடன் வெளிப்படையில் உடன்படிக்கைகள் செய்துகொள்வது. ஆனால், அந்த உடன்படிக்கைகளின் நோக்கம் அந்த சமுதாயத்தின் நாட்டை கைப்பற்றுவதாக இருக்கக் கூடாது.

3) இதன் மூன்றாவது பொருள் இவ்வாறாகும். அதாவது, உடன்படிக்கை செய்து கொண்ட சமுதாயத்தை பலவீனப்படுத்துவது அந்த உடன்படிக்கையின் அசல் நோக்கமாக இருக்கக் கூடாது. சமாதானம் செய்து கொண்டால் பின்னர் அந்த சமுதாயத்துடன் முழுமையாக சமாதானம் செய்து கொள்ள வேண்டும்.

4) இந்த வசனத்தில் இஸ்லாம் எவ்வளவு அருமையான நல்லொழுக்கப் போதனைகளை நல்கியுள்ளது (என்று பாருங்கள்)! மேலும், இஸ்லாம் கூறுகிறது. சமுதாயத்தின் மேன்மை என்பது நிச்சயம் நல்லவிஷயம் ஆகும். ஆனால் ஏமாற்றி, வஞ்சகம் செய்து அதனைப் பெறுவது ஒருபோதும் ஆகுமானதல்ல. உடன்படிக்கைகளின் நோக்கம் அமைதியை நிலைநாட்டுவதாக இருக்கவேண்டுமே தவிர, பிறருக்கு பாதிப்பை ஏற்படுத்துவது அல்லது ஏமாற்றுவது (நோக்கமாக இருக்கக் கூடாது).

இதற்கெதிரில் ஐரோப்பிய சமுதாயங்கள் என்ன செய்கின்றன என்று பாருங்கள். உடன்படிக்கைகள் செய்து கொண்டு பலவீனமான சமுதாயங்கள் அழிக்கப்படுகின்றன. உதாரணமாக, சீனாவில் நடந்துள்ளது. எகிப்தில் நடந்துள்ளது. துருக்கியில் நடந்துள்ளது. ஈரானில் நடந்துள்ளது. மேலும் ஒரு காலத்தில் இந்தியாவிலும் நடந்துள்ளது. தற்போதைய காலத்தில் மீண்டும், போலந்து, ஃபிரான்ஸ், ஃபின்லாந்து, நார்வே, ருமானியா, சேக்கஸ்லோவியா, போன்ற நாடுகளுடன் அவ்வாறான சம்பவங்கள் அரங்கேறி வருகின்றன.

சுருக்கமாக, அல்லாஹ் திருக்குர்ஆனில் முஸ்லிம்களுக்கு இவ்வாறு கட்டளை நல்கியுள்ளான்:

(1) ஒருதரப்பின் வலிமையை வஞ்சகத்தால் ஏமாற்றி பலவீனப்படுத்த வேண்டும் என்ற நோக்கத்துடன் எந்த ஒரு உடன்படிக்கையும் செய்யப்படக் கூடாது.

(2) ஒரு பலவீனமான சமுதாயத்துடன் இவ்வாறான உடன்படிக்கை செய்தல் கூடாது. அதாவது, அந்த உடன்படிக்கையை அடிப்படையாகக் கொண்டு அதனை தமக்கு கீழ் கொண்டு வந்துவிடவேண்டும் என்பது அதன் நோக்கமாக இருக்கக் கூடாது.

(3) ஒருதரப்பின் முன்னேற்றத்தை தடுக்கவேண்டும் என்ற நோக்கத்துடன் எந்த ஒரு உடன்படிக்கையும் செய்தல் கூடாது. அமைதியை நிலை நாட்டுவதற்கு எப்படிபட்ட நுட்பமான போதனை வழங்கப்பட்டுள்ளது! இந்த போதனைகள் பின்பற்றப்பட்டால் அனைத்து குழப்பங்களும் உடனடியாக அழிந்துவிடும்.

(தஃப்ஸீரே கபீர், தொகுதி 4, பக்கம் 229,
காதியான் பதிப்பு 2010)

## திருக்குர்ஆனிலிருந்து...

(செவியேற்பவரே!) இப்ராஹீம் இவ்வாறு கூறிய நேரத்தை (நினைத்துப் பாரும்). என் இறைவா! இந்த (மக்கா) நகரத்தை அமைதிக்குரியதாக்கி வைப்பாயாக. நாங்கள் பொய்தெய்வங்களை வணங்குவதிலிருந்து என்னையும், என் சந்ததிகளையும் காப்பாயாக. (14:36)

A. Basheer Ahmad (Sec. Waqf-e-Jadid, Melapalayam)

**உங்களுக்கு வேலையாட்கள் வேண்டுமா?**

உங்களுக்கு டிரைவர், மேஸ்திரி, மெக்கானிக், எலக்ட்ரீசியன் தேவையென்றால் எங்களை தொடர்பு கொள்ளவும். நாங்கள் உங்களுக்கு நம்பிக்கையான, நல்ல வேலையாட்களை ஏற்பாடு செய்துகொடுப்போம்.

KHAIRUL-ISLAM
JAYGON-WEST BENGAL
97348 44732

O.A. NIJAM
99947 57172

**O.A.N. Doors & Steels**

V.A. SAIT
99430 30230



All Types of wooden Doors, Skin Doors Steel Doors, Membrane Doors, PVC Cup Boards, TMT Rods, Cements, Cover Blocks and Con-

5C/6-A, Ambai Road, Kulavanikarpuram,
{ opp. Karuna Clinic } Tirunelveli-627005

Printed & Published by: Jameel Ahmed Nasir on behalf of Nigran Board of Badar. Name of Owner: Nigran Board of Badar. And Printed at Fazle-Umar Printing Press. Harchowal Road, Qadian, Distt. Gurdaspur-143516, Punjab. And published at office of Weekly Badar Mohallah - Ahmadiyya, Qadian, Distt. Gsp-143516, Punjab. India. Editor: Muzzammil Ahmad